பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 05 | திங்கட்கிழமை 22.10.2018 | கதிர் 350

### இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தலுக்கான Proxy அமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். ஆனால், கட்சி ரீதியாக அது தன்னைச் சரியாகப் பாதுகாத்துக் காபந்துபண்ணிக்கொள்ளவில்லை என்றால், தேர்தலில் தமிழரசுச் சின்னத்தில் தங்கி நின்ற – தங்கி நிற்கின்ற –

பக்கம் 02

# பிரிக்கப்படாத நாட்டில் வாழ நாம் தயார் ஆனால் அதிகாரம் பிரிக்கப்படவேண்டும்



## தமிழரின் நிலைப்பாட்டை விளக்குகிறார் சுமந்திரன்

நாடுதான் பிரிக்கப்பட முடியாதது. ஆட்சி அதிகாரங்கள் பிரிக்கப்படவேண்டும். பிரிக்கப்படாத நாட்டில் வாழ நாம் இணங்கத் தயார். ஆனால் அதற்கான நிபந்தனை ஆட்சி அதிகாரங்கள் பிரிக்கப் படவேண்டும். இதை தெற்கில் சிங்களப் பகுதிகளில் தெளிவாகச் சொல்லி யிருக்கிறேன்.

- இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 02

## இலங்கை அரசின் மீது மோடி கடும் அதிருப்தி

### மன்னிப்புக் கோரினார் ரணில்



புதுடில்லி, ஒக். 22

இரண்டு நாடுகளும் இணங்கிக் கொள்ளப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை,

பக்கம் 11

## சிதைந்துவிட்டது கூட்டமைப்பு

### அனந்தி நேற்று விமர்சனம்

யாழ்ப்பாணம், ஒக். 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட தன் நோக்கம் சிதைந்து போயுள்ளதால் உள்நாட்டிலும்,

பக்கம் 11

## மலையக மக்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 22

மலையகத் தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்

பக்கம் 11

## புதிய கட்சியை நேற்று ஆரம்பித்தார் அனந்தி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாண சபையின் அமைச்சர் அனந்தி சசிதரன் நேற்று யாழ்ப்பாணத்தில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தார்.

பக்கம் 11

## மூடிய அறைக்குள் ரணிலுடன் மோடி!

புதுடில்லி, ஒக். 22


இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், மூடிய அறைக்குள் தனியாகப் பேச்சுகளை நடத்தியுள்ளார்.

புதுடில்லியில் உள்ள ஹைதராபாத் ஹவுசில், நேற்று முன் தினம் பிற்பகல் இந்தியப் பிரதமர் நரேந்

பக்கம் 02

## கோண்டாவிலில் நேற்று இரவு வன்முறைக் கும்பல் அடாவடி

### கடைக்குள் புகுந்து மிரட்டல்



கோண்டாவில் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றின் மீது வாள்வெட்டு வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தித் தப்பிச் சென்றது.

2 மோட்டார் சைக்கிள்களில்வந்த 5பேர் கொண்ட கும்பல் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு கடை உரிமையாளரை மிரட்டிச் சென்

பக்கம் 11

## பலாலி, மட்டக்களப்பிலிருந்து இந்தியாவுக்கு விமான சேவை

### உதவியளிப்பதாக அந்நாட்டு அரசு உறுதி

புதுடில்லி, ஒக். 22

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கும், பலாலி மற்றும், மட்டக்களப்பில் இருந்து தென்

பக்கம் 11

## அம்மாச்சி உணவகங்கள் விரைவில் பெயர் மாற்றம்

### பிரதியமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாணத்தில் பாரம்பரிய உணவுகளுடன் உருவாக்கப்பட்டுள்ள அம்மாச்சி உணவகங்களின் பெயர்களை மாற்றம் செய்வது தொடர்பில் ஆராய்வதாக விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

பக்கம் 11

## முள்ளிக்குளத்தில் பொதுமக்களின் வீதியைத் தடை செய்தது கடற்படை!

### முரண்பட்டதால் அங்கு பதற்றம்

முல்லைத்தீவு, ஒக். 22

முள்ளிக்குளம் கிராமத்திற்கு கடற்படை முகாம் ஊடாகச் செல்லும் பிரதான வீதியைக் கடற்படையினர் திடீரெனமுட்கம்பிகளால், மறித்து அடைத்தமையால் நேற்றுக் காலை முதல் முள்ளிக்குளத்தில் நிலை கொண்டுள்ள கடற்படையினருக்கும், கிராம மக்களுக்கும் இடையில் முரண்

பக்கம் 11



## போதனா வைத்தியசாலை படுகொலை; 31ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் புகுந்து இந்தியப் படைகள் அரங்கேற்றிய கொலைவெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட 21மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட 68 அப்பாவிகளின் 31ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப்

பக்கம் 02



காலைக்கதிர்
Kalaikkathir



## பிரிக்கப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏக்கிய ராஜ்ஜிய/ ஒருமித்த நாடு என்பது பிரிக்கப்படாததும் பிரிக்கமுடியாததும், அரசமைப்புத் திருத்தங்களுக்கான அதிகாரம் நாடாளுமன்றத்திடமும் மக்களிடமும் விடப்பட்டிருக்கிற ஒரு நாடு என்ற வரைவிலக்கணத்தை கொண்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சியா? ஒருமித்த நாடா? என்ற தலைப்பில் நேற்றுப் பருத்தித்துறையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு என்பதை விட ஒருமித்து என்று சொல்லுகின்றபொழுது அங்கே பல மக்கள் வாழுகின்ற ஒரு நாடு, அவர்கள் ஒருமித்து ஒருநாடாக இருக்கிறார்கள் என்ற பொருளும் வரலாம். ஏக்கிய என் பதற்கு அந்தச் சொல் சரியானது. ஐக்கியம் வேண்டும். ஏன்என்றால் பலர்இருப்பதால்தான். ஒருவருக்கு ஐக்கியம் தேவைப்படாதே. ஒரு நாடுஎன்று நீங்கள் சொல்லலாமே என்று அவர்கள் சொன்னதற்கு நாங்கள் சொன்ன பதில் அப்படியானால் ஏக்கிய ராஜ்ஜிய என்று சொல்லாமல் எக்க ரட்ட என்று சொல்லுங்கள் என்றோம்.

ஒரு நாடு என்று பேச்சு வழக்கில் சொல்வதை அரசமைப்புச் சட்டத்தில் எழுத வேண்டுமென றால் சிங்களத்தில் பேச்சு வழக்கில் எக்கரட்ட என்று சொல்லிவிடலாம். இல்லை ஏக்கிய ராஜ்ஜிய என்று சொல்லவேண்டுமாக இருந்தால் - பேச்சுவழக்கில் இல்லாமல் உயர்ந்த மொழி நடையில் சொல்வதாக இருந்தால் - நாங்கள் ஒருமித்த நாடு என்று உபயோகிப்போம் என்று சொல்லியிருக்கின்றோம்.

இந்த ஒற்றையாட்சியா, ஒருமித்த நாடா என்கின்ற இந்த விவாதத்திற்கு நாங்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஏனென்றால் ஏக்கியராஜ்ஜியஎன்று சொன்னால் ஒற்றையாட்சி என்று தான் தலைகீழாக நின்று இன்றைக்கு ஒருவர் விவாதித்துக் கொண்டிருக்கின்றார். அதைச்சொல்லிஒற்றையாட்சி என்ற சொல்லுத்தான் பாவிக்க வேண்டுமென்றும் கேட்கிறார். கடந்தவழிநடத்தல் குழுக்கூட்டத்திலும் ஒற்றையாட்சி என்ற சொல்தான் பாவிக்க வேண்டுமென்று கேட்டார்.

வரைவிலக்கணத்தில் நாடு , நாட்டின் ஆட்சி முறை எப்படி என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஓர் இடத்தில் அல்லாமல் மத்தியிலும் மாகாணத்திலும் இருக்கிறதென்று கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்கத்தக்கதாக ஒற்றையாட்சி என்று சொல்லவேண்டுமென்றுஎங்களில் ஒருவரையே சொல்ல வைத்திருக்கிறார்கள். ஒற்றையாட்சிதான் வேண்டுமென்று எங்களில் ஒருவரையே சொல்ல வைத்திருப்பதால் யார் சொல்லி நீங்கள் இதனைக் கேட்கின்றீர்கள் என்று சம்பந்தன் ஐயா அவரிடம் கேட்டிருக்கின்றார். யார் சொன்னதை வந்து இங்க சொல்கின்றீர்கள் என்று சம்பந்தன் கேட்டிருந்தார்.

ஆகவே எங்களுடைய அடிப்படையான அரசியல் அபிலாசை எப்படியானது? இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய உருவாக்கமே அதிலே தங்கியிருக்கின்றது. சமஷ்டி அடிப்படையானது. ஒற்றையாட்சிக்கு நேர் எதிரானது. ஓரிடத்தில் ஆட்சி இருக்க முடியாதென்பதுதான் எங்களுடைய அடிப்படையான கோட்பாடு. அது தான் எங்களுடைய கொள்கை. அந்தக் கொள்கையிலே நாங்கள் இம்மியளவும் விலக மாட்டோம். ஆனபடியினால்தான் நாங்கள் இது காலவரைக்கும் தெளிவாக ஒற்றையாட்சி என்று இரண்டு அரசமைப்புச் சட்டங்களிலே சொல்லப்பட்டதை விலத்தி ஒருமித்த நாடு என்று சொல்லி அதற்கான வரைவிலக்கணத்தையும் அரசமைப்புச் சட்டத்திலே எழுதவேண்டுமென்று சொல்லி அனைவரும் இணங்கினதாக ஓர் இடைக்கால அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இது ஒரு வரைவாக விரைவிலே வரவிருக்கிறது. அதற்கு தெற்கிலே சிங்களக் கடும் தேசியவாதிகள் கடும்எதிர்ப்பைத்தெரிவிக்கின்றார்கள். ஒற்றையாட்சி அல்லது யுனிற்றரி ஸ்ரேற் என்பது கைவிடப்பட்டுவிட்டால் ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டுவிடும், அப்படி பகிரப்பட்டால் நாடு பிரிந்து விடும் என்று அங்கே பெரிய கோஷம் எழுப்புகிறார்கள். அவர்களிடத்தில் போய் அப்படி நாடு பிரிவதற்கு இடமில்லை, நாங்கள் ஒருமித்த நாட்டுக்கான வரைவிலக்கணத்திலேயே ஒருமித்த நாடு, பிரிக்கப்படமுடியாத நாடு என எழுதியிருக்கின்றோம் என்று கூறுகின்றோம்.

ஆனால் நாடு தான் பிரிக்கப்பட முடியாதது. நாட்டினுடைய சுபாவம் தான் ஒன்றாக இருப்பது. ஆட்சி அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டால் மட்டும் தான் நாடு ஒன்றாக இருக்க முடியும். ஆட்சி அதிகாரங்கள் பெரும்பான்மை வாக்குகளினால் மட்டும் தீர்மானிக்கப்படுமாக இருந்தால் நாடு ஒன்றாக இருக்க முடியாது. இதனை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.

சிங்களப் பகுதிகளிலே பல இடங்களில் சென்று ஒரு விடயத்தைத் தெளிவாகச் சிங்களத்திலே சொல்லியிருக்கிறேன். அதாவது இதுகாலவரை எங்களுடைய நாட்டின் அரசமைப்புச் சட்டத்திலே எங்களுடைய இணக்கப்பாடு கிடையாது. 72 ஆம் ஆண்டு அரசமைப்புச்சட்டத்திற்கு நாங்கள் எங்களுடைய இணக்கத்தைக் கொடுக்கவில்லை. 78 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்திற்கும் இணக்கத்தைக் கொடுக்கவில்லை. தமிழ் மக்களுடைய இணக்கமின்றித் தான் இந்த அரசமைப்புச்சட்டத்திலே நாங்கள் இன்றைக்கு ஆளப்படுகின்றோம். அரசமைப்புச் சட்டம் என்பது மற்றச் சட்டங்களைப் போன்றல்ல. அரசமைப்புச் சட்டமென்பது ஒரு சமூக ஒப்பந்தம்.

அதனை ஏன் சமூக ஒப்பந்தம் என்று சொல்கின்றார்கள் என்றால் அந்த நாட்டிலே வாழுகிற அனைத்து மக்களும் சேர்ந்து இணங்கி ஏற்றுக் கொள்கின்ற - கைச்சாத்திடுகின்ற ஓர் ஒப்பந்தம் என்பதாலே தான். சமூகத்தினுடைய ஒப்பந்தம். ஒரு நாட்டிற்கு ஓர் அரசமைப்புச் சட்டம் உருவாகும்பொழுது அந்த ஒப்பந்தத்திலே என்ன சொல்லப்படுகிறதென்றால், நாங்கள் ஒரு நாடாக வாழ்வதற்கு இணங்குகிறோம் என்பதுதான் அந்த அரசமைப்புச சட்டத்தின் அடிப்படை.

நீங்கள் ஒரு நாடாக இருக்க வேண்டுமென விரும்புகின்றீர்களா? அவ்வாறு விரும்புவதாக இருந்தால் இந்தச் சமூக ஒப்பந்தத்திற்கு நாங்கள் இணங்கவேண்டும். அப்படிஒருநாடாகஇருப்பதற்கு நாங்களாக இணங்குகிறோம் என்றும் சொல்லியிருக்கின்றோம். சிலருக்கு அது பிடிக்காமல் இருந்திருக்கலாம். நாங்கள் ஒரு நாடாக இருப்பதற்கு ஒரு நாட்டிற்குள் வாழ்வதற்கு இணங்குகிறோம். அவ்வாறு இணங்குவதற்கு மக்கள் எமக்கு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் ஒரு நிபந்தனை. பிரிக்கப்படாத நாட்டுக்குள்ளே நாங்கள் வாழ்வதற்கு நாங்கள் இணங்குவதாக இருந்தால் ஆட்சி அதிகாரங்கள் முறையாகப் பிரிக்கப்பட வேண்டும். ஆட்சி அதிகாரங்கள் முறையாகப் பிரிக்கப்பட்டு எங்கள் பிரதேசங்களிலே நாங்கள் ஆளுகின்ற தத்துவங்கள் கொடுக்கப்பட்டால் மட்டும்தான் பிரிக்கப்படாத நாட்டுக்குள்ளே வாழ்வதற்கு இணக்கத்தை தெரிவிக்கின்றோம். அது தான் இந்த இடைக்கால அறிக்கையின் முதல் இரண்டு பக்கத்திலே இருக்கிறது.

ஆட்சி அதிகாரங்கள் பகிரப்பட்டதாக மத்தியிலும் மாகாணத்திலும் இருக்கவேண்டும் என்று உள்ளது. ஆட்சி அதிகாரங்கள் முறையாகப் பிரிக்கப்பட்டால், சமஷ்டிக் கட்டமைப்பில் எப்படியாக இருக்குமோ - அதாவது கொடுக்கப்பட்ட அதிகாரம் திரும்பப் பெற முடியாதவாறு, கொடுக்கப்பட்ட விடயதானங்கள் மீது மத்தி ஆதிக்கம் செலுத்த முடியாதவாறு - முறையாக அது பிரிக்கப்படுமாக இருந்தால், அந்த ஒரு நாட்டிற்குள்ளே வாழ்வதற்கான இணக்கப்பாட்டை நாங்கள் கொடுக்கத் தயார் என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம்.

ஆனால் முறையாக ஆட்சி அதிகாரங்கள் பகிரப்படாவிட்டால் நாங்கள் ஒரு நாட்டிற்குள்ளே வாழ்வதற்கான இணக்கப்பாட்டைக் கொடுப்பதற்குத் தயாரில்லை என்பதையும் சொல்லியிருக்கிறோம். இந்த நாடு ஒரு நாடாக முன்னேறவேண்டுமாக இருந்தால், இந்த நாட்டிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் அப்படியாக ஒரு நாட்டிலே வாழ்வதற்காக தங்கள் இணக்கப்பாட்டைக் கொடுத்தாக வேண்டும். அப்போது தான் சமூக ஒப்பந்தம் உருவாக முடியும். அப்பொழுது தான் அரசியல் சட்டம் உருவாக்கப்பட முடியும்.

நாங்கள் அதைச் செய்வதற்குத் தயார் என்று இலங்கை அரசிற்கும் உலகத்திற்கும் சொல்லியிருக்கின்றோம். இரட்டை நிலைப்பாடு நாங்கள் எடுக்கவில்லை. இரட்டை நிலைப்பாடு எடுத்து இதனைத் தீர்க்க முடியாது. ஆனபடியால் தான் ஒரு நாட்டில் வாழ்வதற்கு நாங்கள் தயார் என்று சொன்னோம். பலருக்கு அதில் பிடிக்காவிட்டாலும் கூட நாங்கள் தெளிவாகவே சொல்லியிருக்கின்றோம். - என்றார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையத்தின் விதிகளின்படி ஒவ்வொரு கட்சியும் தனது வருடாந்த மாநாட்டை ஒழுங்காகக் கூட்டி, புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்து, வருடாந்த கணக்கு வழக்குகளைக் கணக்காய்வு செய்து அது பற்றிய அறிக்கைகள் மற்றும் விவரங்களைத் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் கட்சியின் பதிவைத் தொடர்ந்து தேர்தல் ஆணையம் பேணும்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாப்பின் படி அது தனது வருடாந்தத் தேசிய மாநாட்டை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கட்டாயம் நடத்தவேண்டும். கடைசியாகத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு 2014 செப்ரெம்பரில் வவுனியாவில் நடைபெற்றது. அதில்தான் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசாவும் செயலாளராக சி.துரைராஜசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இந்த இருவரும் பதவியேற்ற பின்னர் 4 வருடங்கள் கடந்தும் தேசிய மாநாடு நடத்தப்படவேயில்லை.

இதை ஆட்சேபித்து கட்சி உறுப்பினர்கள் யாரேனும் நீதி மன்றுக்குச் செல்வார்களானால், தலைவர், செயலாளர் உட்பட கட்சியின் தற்போதைய நிர்வாக அணியே செயற்படுவதற்கு நீதி மன்றம் தடை விதிக்கும் ஆபத்து உண்டு.

அதேபோல தேர்தல் ஆணையகத்துக்கும் இவ்விடயம் - இந்தத் தவறு - சரியாகப் பிரதிநிதித்துவம் செய்யப்படுமானால், கட்சியின் பதிவைக் கூட தேர்தல் ஆணையகம் இடைநிறுத்தும் நெருக்கடி ஏற்படலாம்.

மேலும், உள்ளூராட்சி மன்ற உறுப்புரிமை தொடர்பில் பல அங் கத்தவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றி கட்சித் தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் அவர்கள் நீதிமன்றுக்குச் சென்றுள்ளனர். அந்த வழக்குகளில் கூட கட்சியின் மாநாட்டை ஒழுங்காகக் கூட்டாத காரணத்தால், கட்சியில் இந்தத் தலைவர், செயலாளர் தங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்ற வாதத்தை யாரேனும் முன்வைத்து அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டால் 'கோவிந்தாதான்'!

''கட்சியின் இப்போதைய செயலாளரான கி.துரைராஜசிங்கம் ஒரு சட்டத்தரணி. கட்சியின் துணைச்செயலாளர்களில் ஒருவரான சுமந்திரனோ ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. மற்றொரு துணைச் செயலாளர் சி.வீ.கே. சிவஞானம் நீண்ட காலம் மாநகர ஆணையாளராக இருந்து பழுத்த அனுபவம் பெற்ற நிர்வாகி. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் கூட மூத்த சட்டத்தரணி. கட்சியின் மாநாட்டை ஒழுங்காகக் கூட்டாத தன் ஆபத்து இந்த மூத்த அரசியல் வாதிகளுக்கு விளங்காதா?''- என்று அந்த எம்.பி. சீறுகின்றார்.

டிசெம்பர் அல்லது ஜனவரியில் மாநாட்டை நடத்துவதாக இப்போது உத்தேசம்.

அதுவும் கூட இதற்கு முந்திய மாநாடுகள் போல - 2012, 2014 இல் நடைபெற்றவை போல - கட்சியின் கணக்கு, வழக்கு அறிக்கையே சமர்ப்பிக்கப்படாத மாநாடாக அமையுமா என்று பொருளாளர் கனகசபாபதியிடம் கேட்க வேண்டும் எனவும் அந்த எம்.பி.குறிப்பிட்டார் எனக்கேள்வி.

இதற்குள் இன்னொரு விடயம் கசிந்திருக்கிறது. கட்சியின் தலைவராக மாவையே தொடர்வார். தலைமைப் பதவி வடக்குக்கு என்றால் பொதுச் செயலாளர் பதவி கிழக்குக்கு. அப்படித்தான் இப்போது மட்டக்களப்பில் துரைராஜசிங்கத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அவரது செயலாளர் பணி குறித்து கட்சி மூத்த மட்டத்தில் அதிருப்தி இருப்பதால் அவரை மாற்றலாம் என்று ஒரு முடிவு. அது தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பின் மூத்த - பழுத்த - தமிழரசுக்காரரான முன்னாள் எம்.பி செல்வராஜா கருதுகின்றாராம்.

ஆனால், கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவருமான இரா.சம்பந்தனின் காய் நகர்த்தல் வேறு விதமாக இருக்கின்றதாம்.

கனடாவில் இருந்து வந்த குகதாசனை இப்போது திருகோணமலையில் தமது வலதுகரமாக வைத்து இயக்கி வருகின்றார் சம்பந்தன். இப்போது திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவராகவும் அவரை உயர்த்திவிட்டார்.

தமிழரசுக்குள்ளும், தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளும் சம்பந்தன் - சுமந்திரன் அணியின் ஆசீர்வாதம் பெற்ற கனடாத் தரப்பின் செல்வாக்குக் குறித்து ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றேன். யாழ். மாநகர மேயர் வேட்பாளராக ஆனோல்ட்டை ஒரு வருடத்துக்கு முன்னரே இந்தக் கனடா அணி கனடாவில் தீர்மானத்தது என அப்போது தெரிவித்திருந்தேன். தமிழரசில் கொடி கட்டிப் பறக்கும் கனடா அணியின் முன்னணி நபர்தான் குகதாஸன்.

அவரைத் தமிழரசுக் கட்சியின் செயலாளராக்குவதன் மூலம் பல வசதி, வாய்ப்புகளைச் சுருட்டிக் கொள்ளலாம் என்று இத்தரப்புக் கருகின்றதாம்.

அவர்தான் கட்சியின் அடுத்த செயலாளர் எனறால் காத்திந் தோரை வெட்டி, நேற்று வந்தவர் சுருட்டிக் கொண்டு போனதாகத் தான் அது அமையும்.

\- மின்னல்-

## மூடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திர மோடியை இலங்கைப் பிரதமர் சந்தித்தார்.

இலங்கைப் பிரதமருடன், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் இந்தச் சந்திப்புக்காகச் சென்றிருந்தனர்.

இரண்டு நாடுகளின் பிரதமர்களும், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து இருதரப்புப் பேச்சுக்களை நடத்தினர்.

அதற்குப் பின்னர், இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மூடிய அறைக்குள் தனியாகப் பேச்சு நடத்தினர்.

இதன்போது மிக முக்கிய விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், எந்த விவரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தச் சந்திப்பின் பின்னர் இரண்டு நாடுகளின் தலைவர்களும், ஊடகவியலாளர்களுக்கு எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் மருத்துவர்கள், மருத்துவ சேவையாளர்கள் உட்பட வைத்தியசாலைப் பணியாளர்கள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21ஆம் திகதி புகுந்த இந்தியப்படையினர், 68அப்பாவிகளைச் சுட்டுப் படுகொலை செய்தனர்.

இரண்டு நாள்களாக வைத்தியசாலை ஆக்கிரமித்து வைத்திருந்த இந்தியப் படைகள், மூன்று மருத்துவர்கள், இரண்டு தாதியர்கள், மேற்பார்வையாளர் உள்ளிட்ட 21 மருத்துவ சேவையாளர்களையும், சிகிச்சைபெற்றுவந்த 47 நோயாளர்களையுமாக 68 பேரைக் கொன்று குவித்தன.

தமிழர் தாயகத்தில் இந்தியப் படைகள் அரங்கேற்றிய அப்பாவிகள் படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். (ஐ-07)

# யாழ்.முஸ்லிம் மக்களுடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

## வாழ்வாதார உதவிகளும் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22

யாழ்ப்பாண மாநகர முஸ்லிம் மக்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுச் சந்தித்தனர். தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் நேற்று நண்பகல் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. பெரும் திரளான முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

ஒஸ்மானியா கல்லூரியின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் விதமாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரத்தின் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிக்கும் ஆரோ பிளாண்ட் பிரதம விருந்தினர்களால் இதன்போது திறந்து வைக்கப்பட்டது.

இதேபோல வடமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியொதுக்கீட்டில் கீழ் 3இலட்சத்து 20ஆயிரம் ரூபா பெறுமதியில் 64பேருக்குச் சமையல் உபகரணங்களும், 2 இலட்சத்து 76ஆயிரம் ரூபா பெறுமதியில் 17 பேருக்கு துவிச் சக்கரவண்டியும், 70 ஆயிரம் ரூபா பெறுமதியில் ஜே.282 கிராம சேவையாளர் பிரிவுள்ள முதியோர் சங்கத்திற்கு ஒலிபெருக்கி சாதனம் என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அய்யூப் அஸ்மின், இ.ஜெயசேகரம், கேசவன் சயந்தன் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனோல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-7)

# சிறைக் கூரை மீது ஏறி கைதிகள் ஆர்ப்பாட்டம்



கொழும்பு, ஒக். 22

அம்பாந்தோட்டை, அங்குனு கொலபெலஸ்ஸ சிறைச்சாலை கூரை மீது ஏறி 100 இற்கும் மேற்பட்ட கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 5.30 மணி முதல் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறைச்சாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே கைதிகள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விசேட அதிரடிப் படையினர் சிறைச்சாலையிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் கோரியுள்ளனர்.

கடந்த வாரம் முதல் சிறைச் சாலைக்குக் கொண்டுவரப்படும் உணவுகள் உள்ளிட்ட பொருள்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதாகவும், இதன் காரணமாக அந்தப் பொருள்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக் கைதிகள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக இந்தச் சிறைச்சாலையில் சட்டவிரோதமான செயற்பாடுகள் அதிகரித்துள்ளன எனவும், சிறைச்சாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை காரணமாக அங்குனுகொலபெலஸ்ஸவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக அங்கு குற்றச்செயல்களின் எண்ணிக்கை குறைவடையும் எனவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# 11 கிலோ மாவாவை ஓட்டோவில் கொண்டு சென்ற ஒருவர் கைது

தெல்லிப்பளைப் பகுதிக்கு மாவா போதைப் பொருளை விநியோகிக்கச் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் சிறப்புப் பொலிஸ் பிரிவால் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 11 கிலோ கிராம் மாவா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் கணேசநாதனுக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைவாக அவரின் பொலிஸ் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட 41 வயதுடைய சந்தேகநபரே கைது செய்யப்பட்டார்.

முச்சக்கரவண்டியில் மாவா போதைப்பொருளை எடுத்துச் சென்றபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். மாவா போதைப்பொருளும் முச்சக்கரவண்டியும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் நீதிமன்ற நடவடிக்கைக்காக தெல்லிப்பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக தீபாலியை நியமிக்கப் பரிந்துரை

உயர் நீதிமன்றில் ஏற்பட்டுள்ள நீதியரசர் வெற்றிடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபலி விஜயசுந்தரவை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பரிந்துரைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் ஓய்வு பெற்றதையடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் நளின் பண்டார, பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமில் வெற்றிடம் ஏற்பட்டது. இந்த வெற்றிடத்துக்கே மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர் தீபலி விஜயசுந்தரவை நியமிக்க அரசமைப்புச் சபைக்கு ஜனாதிபதி பரிந்துரை வழங்கியுள்ளார்.

இதேவேளை, நீதியரசர் தீபலி விஜயசுந்தரவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவியுயர் வழங்குவதால் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஏற்படும் நீதியரசர் வெற்றிடத்துக்குக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தனவை நியமிப்பதற்கும் ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார்.

இவர்கள் இருவரது நியமனம் தொடர்பில் அரசமைப்புச் சபை கூடி ஒப்புதல் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இரகசியம் வெளியிடும் அமைச்சர்களை கண்டறிய விசேட விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 22

அமைச்சரவை இரகசியங்களை ஊடகங்களுக்கு தெரிவிக்கும் அமைச்சர்களைக் கண்டறிவதற்கான விசேட விசாரணைகள் ஜனாதிபதியின் கட்டளைக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த அமைச்சரவைச் சந்திப்பின்போது, இந்தியாவின் றோ அமைப்பு அந்தத் தகவலை 4 அமைச்சர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டதாக 'த ஹிந்து' நாளிதழின் செய்தியாளர் தெரிவித்திருந்தார். இந்த விடயம் குறித்து, ஜனாதிபதியின் கட்டளைக்கமைய விசேட விசாரணைக் குழு அலைபேசி அழைப்புகள் உள்ளிட்ட பல வகைகளில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# அனந்தியின் கட்சியால் தமிழ் மக்களுக்கு பெருமை கிட்டுமா என்பது கேள்விக்குறி

## கூறுகிறார் வடமாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம்

வவுனியா, ஒக். 22

அனந்தி சசிதரனால் புதிதாக உருவாக்கப்பட்ட கட்சியால் அவருக்குப் பெருமை கிடைக்கிறதோ இல்லையோ அதனூடாகத் தமிழர்களுக்குப் பெருமை கிடைக்குமா என்பது கேள்விக்குரிய விடயமே என மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட மகளிர் அணிக்கான நிர்வாகத் தெரிவு வவுனியாவில் தமிழரசுக்கட்சி அலுவலகமான தாயகத்தில் நேற்று இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வட மாகாணத்தில் மட்டுமல்ல, இலங்கை முழுவதும் தற்போது அரசியல் பரபரப்பான நிலையில் காணப்படுகின்றது. எமது நாட்டில் தற்போது பல விடயங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எமது முதலாவது வடக்கு மாகாண சபையும் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிடுகின்றது. அத்துடன் இலங்கையில் தமது பதவிக்காலத்தை முடிவுறுத்திய சபைகளாக 6 சபைகள் காணப்படுகின்றன.

ஆட்சிக்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தல் வரவேண்டும். இந்தத் தேர்தலை மையமாக வைத்தே இந்த நாட்டில் அரசியல் பரபரப்பான நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையிலேயே அனந்தி சசிதரன் தலைமையில் புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் ஒரு பெண் செயலாளர் நாயகமாக இருக்கும் முதலாவது கட்சி என்ற பெருமை அவருக்குக் கிடைத்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்தப் பெருமை அவருக்குக் கிடைக்கிறதோ, இல்லையோ அதனூடாக தமிழர்களுக்குப் பெருமை கிடைக்குமா என்பது கேள்விக்குரிய விடயமே.

இதேபோலவே முதலமைச்சரும் புலி வருது புலி வருது என்ற கதையாக இன்னும் புலியைக் காணவில்லை. அவர் ஒரு நாளைக்கு கூறுகின்றார் புதிய கட்சியை தொடங்கப்போகின்றேன் என்று. பின்னர் பொது அமைப்புக்களின் தலைவராக இருந்து செயற்படப் போகிறார் எனத் தெரிவிக்கின்றார். அதன் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிழை என்கிறார். அதற்கும்பால் முதலமைச்சர் வேட்பாளராகத் தன்னை தமிழ் தேசியக்கூட்டமைப்பு நிறுத்தினால் தான் கூட்டமைப்புக்குள் வருவதாகக் கூறுகின்றார். இவ்வாறு குழப்பிய கதையை அவர் சொல்லிக்கொண்டே இருக்கின்றார்.

இந் நிலையில் தான் எதிர்வரும் 24 ஆம் திகதி தனது அரசியல் எதிர்காலம் தொடர்பாக தெரிவிக்கப் போகிறார் எனக் கூறுகிறார். தமிழ் மக்களினுடைய அரசியல் எதிர் காலம் பற்றியதாக அல்லாமல் தனது அரசியல் எதிர் காலம் தொடர்பாக அறிவிப்பதாக அவர் சொல்லி யிருக்கிறார். இவ்வாறாக வடக்கில் அரசியல் சூடுபிடித் துள்ள நிலையில் தென்பகுதியிலும் இந்தத் தேர்தலை மையமாக வைத்து பிரச்சினை போய்க்கொண்டிருக்கின்றது. ஐ.தே.கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கிய இந்த அரசைச் சீர்குலைத்து இடைக்கால அரசை உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மஹிந்த தலைமையிலான அணி முனைப்புக் காட்டி வருகின்றது.



அத்துடன் தேர்தல் வரலாம் என்ற நிலையில் வெவ்வேறு கட்சிகள் பல அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. இதற்குள் ஜனாதிபதியைக் கொலை செய்ய முயற்சித்த கதையும் போய்க்கொண்டிருக்கின்றது – என்றார். (ஐ-100)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இறுதி நாள்களில் மாகாண சபை

விளையாட்டுக்களில் இறுதிக் கட்டம் நெருங்கும்போது, எதிரெதிர் தரப்பு மோதல் சூடு பிடிக்கும். இறுதி விசில் ஊதப்படும் வரை துவந்தம் மும்முரமாகிவிடும்.

நமது வடக்கு அரசியலிலும் நிலைமை அதுதான் போலும். வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு நாளை. அதற்கு அடுத்த நாளுடன் தற்போதைய சபையின் காலம் முடிந்துவிடும்.

இந்த இறுதி நேரத்தில் இரு தரப்பு மோதல் சூடு பிடித்திருக்கின்றது. இந்த இரு தரப்புக்கள் என்பவை கூட நாளை மறுதினம் தற்போதைய மாகாணசபை காலாவதியாகும் வரை ஒரு கட்சியின் பெயரில் களத்தில் நிற்பவைதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே, கன்னை பிரிந்து மோதி வரும் தரப்புகளின் துவந்தத்தைத்தான் நாம் இப்போது கண்டு வருந்தி வருகிறோம்.

கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டு, வேறு கட்சியில் இணைந்தால் – அல்லது வேறு கட்சியை ஆரம்பித்தால் – கூட்டமைப்பின் அங்கத்துவத்தையும், அதன் காரணமாக மாகாண சபை உறுப்பினர் பதவியையும் தானாகவே பறிகொடுக்க வேண்டி நேரும் என்றுணர்ந்த அனந்தி சசிதரன், மாகாணசபை உறுப்பினர் பதவியை முழு ஆட்சிக் காலத்துக்கும் அனுபவித்து, அதன் மூலம் அமைச்சர் பதவியையும் அலங்கரித்து விட்டு, மாகாண சபை உறுப்பினர் பதவிக்குரிய காலம் முடியும்போது புதுக்கட்சி தொடங்குகின்றார். அவரைப் பொறுத்த வரை நல்ல அரசியல் தந்திரம்தான்.

வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட அப்படித்தான். கூட்டமைப்பு போட்ட முதல்வர் பதவியை முழுமையாகப் பிரயோகித்து ஆண்டனுபவித்த பின்னர், அது முடிந்த கையோடு, தமது அரசியல் மாற்றுத் திட்டம் குறித்து நாளை மறுதினம் அறிவிக்கப் போகிறாராம்.

நிச்சயமாக அது, தமிழ்க் கூட்டமைப்புடன் இணைந்து அரசியல் செய்யும் விடயமாக – திட்டமாக – இருக்காது என்பது தெளிவு. ஆக, கூட்டமைப்பு மூலம் அறிமுகமாகிப் பெற்ற வெற்றியை – பதவியை – அது முடியும் வரை கூட்டமைப்பு உறுப்புரிமையை விலத்தாது பேணி, அந்தப் பதவியை முற்றாக முடித்த பின்னர், கூட்டமைப்புக்கு வெளியே வரும் அறிவிப்பைத்தான் அவரும் விடுக்கப்போகின்றார்.

வெளியே வரும் நாள் நெருங்க, நெருங்க அவரது அரசியல் தாக்குதலின் வீரியமும் கூடிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

*"சிங்கள ஆளும் தரப்புக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளித்து, எமது முன்னைய தமிழ் தலைவர்கள் இழைத்த அதே பிழையைத்தான் இப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையும் இழைக்கின்றது."* – என்று கடந்த வெள்ளிக்கிழமையன்று காட்டமாகத் தாக்கிய முதலமைச்சர், அடுத்த நாள் தமது அரசியல் கணைகளை இன்னும் தீவிரப்படுத்திக் கொண்டார்.

*"அடிப்படை அறிவு கூட இல்லாத தமிழ்த் தலைமைகளையே நாம் இப்போது கொண்டுள்ளோம்."* – என்று பச்சையாகக் கூறியதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே – குறிப்பாக சம்பந்தனின் அரசியல் முதிர்ச்சியையே – பெருங்கேள்விக்கு உள்ளாக்கியிருக்கின்றார் அவர்.

அரசியலில் தனி வழி போகும் முடிவை நாளை மறுதினம் அறிவிக்க முன்னரும், அதை அறிவித்த பின்னரும் இந்த அரசியல் தாக்குதலின் கடுமை இன்னும் தீவிரம் பெறும் எனவும் எதிர்பார்க்கலாம்.

இதேசமயம் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான மறுத்தான் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனை வடக்கு மாகாண முதலமைச்சராக்கியமை ஐந்து வருடங்களுக்கு முன்னர் தான் செய்த பெரும் பாவம் – என்று குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முயன்றிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

அவரது கூற்றில் கூட முரண்நகை இருக்கின்றது. முதலமைச்சர் பதவியை விக்னேஸ்வரனுக்குக் கொடுத்தவர் அவரல்லர். அதை, ஒற்றைக் காலில் நின்று வழங்கியவர் – அல்லது பெற்றுக் கொடுத்தவர் – கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன்தான். வேண்டுமானால், அந்தப் பதவியை வேறு வழியின்றி விட்டுக் கொடுத்தவர் என்று மாவையைக் கூறலாம். அந்தப் பதவிக்காக இன்றும் – இன்னும் – இனியும் – நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு காத்திருக்கும் மாவை சேனாதிராசா, அதை அப்போது தாமாக விரும்பி விட்டுக் கொடுத்தார் என்று கூடக் கூற முடியாது. அன்றைய அரசியல் சூழ்நிலை – நிர்ப்பந்தம் – நெருக்குதல் – விட்டுக் கொடுப்பதைத் தவிர, வேறு வழியில்லை என்ற நிலைக்கு மாவையரை நெட்டித் தள்ளியது என்பதே உண்மை.

ஆனால், அவர் இப்போது குறிப்பிடுகின்றமை போல அவர் தாம் செய்த பாவம் என்று வருந்த வேண்டிய ஓர் விடயம் இதில் உள்ளது. ஒற்றைக் காலில் நின்று முதல்வராக விக்கியை நிறுத்தும் முடிவை – மாவையின் விருப்பத்தையும் மீறி – எடுத்த சம்பந்தன், மாவைக்கான ஓர் ஆறுதல் பரிசாக அந்தத் தேர்தலில் ஏனைய வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் முழுப் பொறுப்பையும் தாம் தலையிடாமல் முற்றாக மாவையிடமே ஒப்படைத்தார்.

வடக்கு மாகாணசபை இன்றைய இந்தச் சீத்துவ நிலைக்கு வரக்கூடிய அளவுக்கு – அவலத்துக்கு – இத்த கையோர் சபை உறுப்பினர்களாக வருவதற்கு வேட்பாளர்களாகத் தெரிவு செய்து நிறுத்திப் பெரும் வரலாற்றுத் தவறை இழைத்தவர் மாவையர்தான். அந்தப் பாவத்துக்காக அவர் வேண்டுமானால் குமுறிக் கவலைப்படலாம்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக கிளிநொச்சியில் புதனன்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, ஒக். 22

அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவாக இருக்கவேண்டும் எனக் கோரித் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாகக் கிளிநொச்சியிலும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்டக் காரியாலயம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தப் போராட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பழையகச்சேரிக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

நாகரிகம் வளர்ந்து விட்ட இந்த உலகிலே வெறும் தொழிலாளர்களாக, முதலாளிகளுக்கு வெறும் இலாபத்தை ஈட்டிகொடுக்கிறவர்களாக, இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தினுடைய முதுகெலும்பாக இருக்கின்ற எமது உறவுகளால் நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் ரூ. 15 லட்சம் செலவில் வீதி விளக்கு



முல்லைத்தீவு, ஒக். 22

புதுக்குடியிருப்புபிரதேசசபையால் தமது பிரதேச சபை எல்லைக்குட்ப்பட்ட கிராமங்களில் 15 லட்சம் ரூபா செலவில் முதற்கட்டமாக 324 வீதி மின்விளக்கள் பொருத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தவிசாளர் செ.பிறேமகாந்த் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்–

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபை உறுப்பினர்களின் கோரிக்கைகள் மற்றும் பொது அமைப்புக்களின்கோரிக்கைகளுக்கு அமைவாக இப்பணி பூர்த்தியடைய சபை உறுப்பினர்கள் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியிருந்த னர்.

புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களையும் உள்ளடக்கி முடிந்தளவு முதற்கட்ட முயற்சியாக 15 லட்சம் ரூபா செலவில் 324 மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

தொடர்ச்சியாககோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கட்டம் கட்டமாக அவைகள் நிறைவு செய்யப்படும்–என்றார். (ஐ)

# வடக்கு விவசாய அமைச்சரால் 100 பயனாளிகளுக்கு உதவிகள்



யாழ்ப்பாணம், ஒக். 22

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 100 க்கும் அதிகமான விவசாயப் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன.

திருநெல்வேலி விவசாயப் பண்ணையில் நேற்றுக் காலை மாகாண விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான விவசாய உபகரணங்களை வழங்கி வைத்தார்.

நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்மோட்டர், குரங்குகளை கட்டுப்படுத்துவதற்கான துப்பாக்கிகள், அசோலா வளர்ப்புக்கான பாரிய தொட்டிகள், விவசாய உபகரணங்கள் மற்றும் மரக்கன்றுகள் என சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உபகரணங் கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.(ஐ)

# வடமராட்சியில் சாதனையாளர் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 22

வடமராட்சி வலயத்தினால் நடத்தப்பட்ட சாதனையாளர் கௌரவிப்பும்பரிசில்தினநிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஹாட்லிக்கல்லூரி கேட்போர் கூடத்தில்நடைபெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். 2018 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் முதல் 3 இடங்களில் உள்ள குகேந்திரன் அபர்ணா,தெய்வதர்ஷன்அக்ஷயன், பூபாலசிங்கம் டேனுபிரநதி ஆகிய மூவருக்கும் வாழ்த்துமடல்களை வழங்கி கௌரவித்தார். (ஐ)

## மலையக ரயில் போக்குவரத்து பாதிப்பு

மலையக ரயில் வீதியிலுள்ள ரதெல்ல பகுதியில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் பயணித்த ரயில் ஒன்று தடம் புரண்டதில் மலையகத்துக்கான ரயில்சேவைகள்பாதிப்படைந்தன.

இந்த ரயில் பாதையைச் சீர் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (இ)

## நாளை

23.10.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப. 9.33 வரை
திதி : சதுர்த்தசி. மு.இ. 10.56 வரை
சுபநேரம் : 10.32 – 12.02 வரை
இராகுகாலம் : 3. 02 – 4.32 வரை

# விவசாயத்தில் தன்னிறைவு அதுவே எமது ஒரே இலக்கு

## கூறுகிறார் அங்கஜன் இராமநாதன்

யாழ்ப்பாணம், ஒக். 22

விவசாயத்துறையில் தன்னிறைவு பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எமது நோக்கம் என விவசாயப் பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கின் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் அங்கஜன் இராமநாதன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விவசாயிகளின் தேவைகளை அறிந்து, உள்ளீடுகளை வழங்கி, மேலதிகமான உற்பத்திகளின் மூலம் ஏற்றுமதிகளை அதிகரிக்கலாம்.

இதன்மூலம் உற்பத்தியின் தரத்தோடு, எமது தனித்துவமான விளைபொருட்களை உலகளவில் கேள்விகளை அதிகரித்து கொள்ளலாம்.

இந்த இறுதிக் காலாண்டின் 3 மாதகாலச் செயற்திட்ட நடைமுறைகளுக்காகவும், காலபோக, பெரும் போக நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளுக்காகவும் விவசாயிகளின் எதிர்காலத்திற்காகவும் கமத்தொழில் அமைச்சு 50 சதவீத மானியத்துடன் 252 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.



உற்பத்தி வலயங்கள் உருவாக்கப்பட்டு, செயல்முறையாக்கப்பட்டுள்ளமையுடன், உருளைக் கிழங்கு செய்கைக்காக 7 கோடி 6 இலட்சம் ரூபா மானியதிற்காக வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உழுந்து 16 ஆயிரம் ஏக்கரில் 6 கோடி ரூபாவில் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. செயற்படுத்தப்பட்டிருக்கும் உற்பத்தி வலயங்கள் ஊடாக அறுவடைகள் அதிகரிக்கும் போது இறக்குமதிகளை கட்டுப்படுத்தி, நிரந்தர விலைகளை நிர்ணயித்து ஏற்றுமதி வாய்ப்புக்களை வழங்கலாம் – என்றார். (ஐ)

# 11 ஆயிரம் அபாயகர வெடிபொருள்கள் யாழ்ப்பாணத்தில் அகற்றப்பட்டன



யாழ்ப்பாணம், ஒக். 22

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் 'ஸாப்' மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம் கடந்த இரு ஆண்டுகளில் (11,086) அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளதாக ஸாப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும் 6 இலட்சத்து 49ஆயிரத்து 613 சதுரமீற்றர் பரப்பளவில் 11,086 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டன.

இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றது.

இந்நிறுவனத்தில் மொத்தம் 118 பணியாளர்கள் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதில் 11 பெண் பணியாளர்களும் அடங்குகின்றனர் – என்றார். (ஐ)

# ரணில் - மோடி பேச்சுக்களில் முக்கிய விடயங்கள் ஆராய்வு

புதுடில்லிக்குப் பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். ஹைதராபாத் ஹவுஸில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, இரு தரப்பு உறவுகள் மற்றும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியில் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்தும் வழிகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், பிராந்திய மற்றும் பூகோள விவகாரங்கள் தொடர்பாகவும், இரண்டு நாடுகளின் தலைவர்களும், கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு இலங்கைக்கு மோடி மேற்கொண்ட பயணத்தின்போதும், அண்மைய உயர்மட்ட சந்திப்புகளின்போதும், எடுக்கப்பட்ட பல்வேறு முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாகவும், இதன்போது மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும், இந்திய – இலங்கைப் பிரதமர்களின் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது, மத்தள விமான நிலையத்தை இந்தியா பொறுப்பேற்றுக் கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கின்றது. நாங்கள் பயனுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டோம். இந்திய – இலங்கை ஒத்துழைப்பு குறித்த பல்வேறு காரணிகள் தொடர்பாக மீளாய்வு செய்தோம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ருவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குழுவினருக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் மதிய போசன விருந்துபசாரத்தையும் வழங்கினார். (ஐ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண் உட்பட இருவர் கைது



சட்டவிரோதமான முறையில் 195 வெளிநாட்டு சிகரெட் பைக்கெட்டுக்களை இலங்கைக்கு கொண்டு வந்த இருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் எனச் சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த 195 சிகரெட் பைக்கட்டுக்களிலுமிருந்து 39 ஆயிரம் சிகரெட்டுக்களை மீட்டுள்ளதாகத் தெரிவித்த சுங்கப் பிரிவு அதிகாரிகள், அவற்றின் பெறுமதி 195,000 ரூபாவாகும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். நேற்றுக் காலை 07 மணியளவில் டுபாயிலிருந்து வருகை தந்த ஆண் ஒருவரும் பெண் ஒருவருமே இவ்வாறு சிகரெட்டுக்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமற்போனோர் சங்கத்தின் தலைவிக்குக் கொலை மிரட்டல்

அம்பாறை, ஒக். 22

தமக்கு இனந்தெரியாத நபர்களினால் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்துள்ளார்.

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் அமைந்துள்ள காணாமல் அக்கப்பட்டோர் உறவுகளின் சங்க அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் ஊடாக வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற்று மீண்டும் இயக்கத்தை வளர்க்க முயற்சிப்பதாகவும், தமக்கு 10 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுக்கவேண்டும் அல்லது உன்னுடைய தலையை வெட்டிக் கொலை செய்வோம் எனத் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்துள்ளனர்.

நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணாமற்போன உறவுகளுக்கு நீதி வேண்டிப் போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

எமது மக்களின் பிரச்சினைகளை நான் நேரடியாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு எடுத்துச் சென்று முறைப்பாடுகளை முன்வைத்து வந்துள்ளேன். எனக்கு யாரும் பணம் கொடுக்கவில்லை. இவ்வாறு இல்லை என்பதனையும்



என்னால் நிருபிக்க முடியும்.

நான் அங்கு இருந்து வரும்போது பண மூடைகளை கொண்டு வந்து இங்கு உள்ளவர்களை வைத்து இயக்கம் வளர்ப்பதாக எனக்குக் கொச்சைத் தமிழில் துண்டுப் பிரசுரங்கள் அடித்து ஒட்டி வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தில் 60 வயதைக் கடந்த தாய்மார்கள்தான் இருக்கின்றார்கள். இவர்களை வைத்து என்ன இயக்கம் வளர்க்க முடியும்?

எனக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளமையுடன் கொழும்பில் உள்ள ஐ.நா தூதரத்திற்கும், மனித உரிமை அமைப்புக்கும் மற்றும் இலங்கை அரசுக்கும் மகஜர் ஒன்றை இன்று திங்கட்கிழமை அனுப்பி வைக்கவுள்ளளேன் – என்றார். (ஐ)

# மலையக மக்களுக்காக கிழக்கிலும் போராட்டம்



மலையகத் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து கிழக்குமாகாணத்திலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்பாக முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள இளைஞர்கள், பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும், தோட்ட கம்பனிகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பினர். (ஐ)

# ஆப்கான் தேர்தலில் பெரும் வன்முறை 300 இடங்களில் குண்டுவெடிப்புகள்!

காபூல்,ஒக்.22

சனியன்று நடைபெற்ற ஆப்கானிஸ்தான் தேர்தலில் பயங்கர வன்முறை ஏற்பட்டது. 300க்கும் மேற்பட்ட இடங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இதில் 170 பேர் பலியாயினர்.

250 உறுப்பினர்களைக் கொண்ட ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடந்தது. 2500க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஆனால் தேர்தல் நடந்த பெரும்பாலான தொகுதிகளில் பயங்கர வன்முறை வெடித்தது.

வாக்காளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் திரண்டு வந்து வாக்குச் சாவடிகளில் காத்திருந்தனர். இதனால் தீவிரவாதிகள் ஆத்திரம் அடைந்து வன்முறையில் ஈடுபட்டனர். மேலும் ஆங்காங்கே வெடிகுண்டு மற்றும் ராக்கெட் தாக்குதல்களையும் நடத்தினர்.



170 பேர் சாவு; 300 பேர் வரை படுகாயம்

குறிப்பாக காபூல், காந்தகார், நங்கார்ஹார், குண்டூஸ், ஹெல்மாண்ட் மாகாணங்களில் தலிபான் பயங்கரவாதிகள் வாக்குச் சாவடிகளைக் குறி வைத்துத் தாக்குதல் நடத்தினர். தலைநகர் காபூலில் மனித வெடிகுண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

318 வாக்குப் பதிவு மையங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று தலிபான்கள் அறிவித்தனர். இதில் மொத்தம் 170க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் பலியாகி விட்டனர். மேலும் 300க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.

இதனால் 350க்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் நேற்று திட்டமிட்டபடி வாக்குப் பதிவு நடக்கவில்லை. இந்த பகுதிகளில் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்திருந்தது.

## சிரியாவில் அமெ. வான் தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 35 பேர் சாவு!



பெய்ரூட்,ஒக்.22

அமெரிக்க ஆதரவுப்படைகள் சிரியாவில் நடத்திய வான்வழித் தாக்குதலில்ஐ.எஸ். அமைப்பின் 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது.

சிரியாவில் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியாளர்கள் கடந்த பல வருடங்களாக வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை இராணுவம் கொண்டு அரசு கட்டுப்படுத்தி வருகிறது.

இந்த நிலையில், அரசுக்கு எதிராக ஐ.எஸ். அமைப்பினரும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்நாட்டு அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான படைகள் போரில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் சிரிய மனித உரிமைகளுக்கான கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில், ஹாஜின் நகரில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 28 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதேபோன்று சிரிய ஜனநாயகப் படையினர் நடத்திய தரைவழித் தாக்குதலில் 7 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளது.

## ரஷ்யாவிடமிருந்து ஏவுகணை வாங்கும் இந்தியாவின் முடிவுக்கு பாக். கண்டனம்

இஸ்லாமாபாத்,ஒக்.22

ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணை வாங்கும் இந்தியாவின் முடிவு, தெற்கு ஆசியாவைச் சீர்குலைக்கும் என்றும், மீண்டும் ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்கும் என்றும் பாகிஸ்தான் குறை கூறியுள்ளது.

தனது நாட்டின் வான் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ரஷ்யாவிடம் இருந்து எஸ்–400 ஏவுகணை அமைப்பை இந்தியா வாங்குகிறது.

இதனால் அதிருப்தி அடைந்திருக்கும் பாகிஸ்தான் தற்போது இந்தியா மீது வெளிப்படையாகக் குற்றம் சாட்டியிருக்கிறது.

இது குறித்து அந்த நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

கடந்த 1998 இல் இரு நாடுகளும் அணுகுண்டு சோதனை நடத்தியமையைத் தொடர்ந்து, இந்தபிராந்தியத்தில்கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும் என்ற



பரிந்துரையை பாகிஸ்தான் வைத்ததுடன், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை அமைப்பை வாங்கும் இந்தியாவின் முடிவுக்கும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆனால் இந்த பரிந்துரை நிராகரிக்கப்பட்டதால் எந்தவகையான ஏவுகணைகளையும் செயலிழக்க செய்யும் வலிமையை அடைவதற்கு பாகிஸ்தான் தள்ளப்பட்டது. – என்று கூறப்பட்டு உள்ளது.

மேலும், இந்தப் பிராந்தியத்தைச் சீர்குலைக்கும் எந்த வகையான ஆயுதங்களையும் எதிர்க்கும் வலிமை தங்களுக்கு இருப்பதாக பாகிஸ்தான் தொடர்ந்தும் உறுதியாக நம்புவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

## 18 ஆண்டுகளில் 44 குழந்தைகள்; நாற்பது வயது உகண்டா மகராசி

உகாண்டாவின் முகோனோ மாவட்டத்தில் வசிக்கிறார் 40 வயது மரியம் நபடான்ஸி. ஆப்பிரிக்க நாடுகளிலேயே அதிகக் குழந்தைகள் பெற்ற தாய் இவர்தான். தன்னுடைய வாழ்நாளில் 18 ஆண்டுகள் பிரசவத்திலேயே கழித்திருக்கும் இவருக்கு 44 குழந்தைகள்! இவற்றில் 6 இரட்டைக் குழந்தைகள், 4 முறை மூன்று குழந்தைகள், 3 முறை நான்கு குழந்தைகள், 8 தனிக் குழந்தைகள் என்று பிரசவித்திருக்கிறார். 44 குழந்தைகளில் தற்போது 38 குழந்தைகள் உயிருடன் இருக்கின்றனர். தனியாளாக இத்தனை குழந்தைகளையும் பார்த்துக்கொள்கிறார் மரியம்.

“என் சிற்றன்னையின் கொடுமையில் வளர்ந்தேன். ஒருநாள் சாப்பாட்டில் விஷம் வைத்துவிட்டார். இதில் என்னுடன் பிறந்தவர்கள் 4 பேர் இறந்துவிட்டனர். நான் வெளியே சென்றிருந்ததால் தப்பிவிட்டேன். என்னை 12 வயதில் 28 வருடம் மூத்தவருக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டனர். அந்த ஆள் ஒருநாள் கூட அடிக்காமல் இருந்ததில்லை. தினமும் குடித்துவிட்டு ரகளை. நரக வாழ்க்கை. விருப்பம் இல்லாவிட்டாலும் மறுக்க முடியாது, குடும்பம் நடத்திதான் ஆக வேண்டும். அவருக்கு நான் மட்டும் மனைவியல்லன். பல பெண்கள் மூலம் ஏராளமான குழந்தைகள் உண்டு. வெளியில் வேலை செய்து சம்பாதிக்க வேண்டும். வீட்டிலும் கடுமையான வேலை இருக்கும். இதில் பெரும்பாலும் நான் கர்ப்பத்தோடுதான் இருப்பேன். ஆனாலும் குழந்தைகள் மூலமே கொஞ்சம் மகிழ்ச்சியும் வாழ்க்கை மீதான பற்றும் எனக்கு ஏற்பட்டன . கணவருக்குப் பல்வேறு ஊர்களில் மனைவிகள் இருந்ததால், ஆண்டுக்கு ஒருமுறை இரவில்தான் இங்கே வருவார். குடும்பம் நடத்துவார். அதிகாலை குழந்தைகள் கண் விழிப்பதற்குள் கிளம்பிவிடுவார். என் மூத்த மகனே 13 வயதில்தான் அவன் அப்பாவைப் பார்த்தான். என்னுடைய பல குழந்தைகள் அவரை இதுவரை பார்த்ததில்லை. 1994ஆம் ஆண்டு 13 வயதில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அதற்குப் பிறகு 2, 3, 4 என்று குழந்தைகள் பிறந்துகொண்டே இருந்தன. என் அப்பாவுக்குப் பல மனைவிகள் மூலம் 45 குழந்தைகள் பிறந்தன. ஆனால் ஒரே



தாய் மூலம் 44 குழந்தைகளைப் பெற்றெடுத்தவள் நான் மட்டும்தான் என்கிறாள். 25 ஆவது குழந்தை பிறந்த பிறகு மருத்துவரிடம் சென்றேன். வயிற்றில் உருவான கருவைக் கலைக்கச் சொன்னேன். பல கருக்கள் இருந்ததால் கலைப்பது உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று கூறிவிட்டார். இப்படி ஒவ்வொரு முறை வாந்தி எடுக்கும்போதும் மருத்துவரிடம் செல்வேன். அவரும் இது மரபணுப் பிரச்சினை. அதிகமான சினை முட்டைகள் உருவாகின்றன, கலைக்க முடியாது என்று கூறிவிடுவார். 44 ஆவது குழந்தைக்குப் பிறகு கர்ப்பப்பையை நீக்கிவிட்டேன். ஒரு நாளைக்கு 10 கிலோ சோள மாவு, 4 கிலோ சர்க்கரை, 3 பார் சோப் எங்கள் குடும்பத்துக்குத் தேவைப்படுகின்றன. நிரந்தர வேலை இல்லாவிட்டாலும் தினமும் எங்காவது வேலைக்குச் சென்றுவிடுவேன். ஒருநாள் கூட உடல்நிலை சரியில்லை என்று வீட்டில் இருக்க முடியாது. எப்படியோ இதுவரை குழந்தைகளுக்குப் பட்டினி போடாமல் வாழ்ந்துவருகிறேன்” - என்கிறார் மரியம். இவரது கதை வெளிவந்த பிறகு, சில அமைப்புகள் நன்கொடை திரட்டிக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

பிள்ளைப் பெறும் இயந்திரம்போல் இருக்கிறதே ஆப்பிரிக்கப் பெண்களின் வாழ்க்கை!

# பா.ஜ.கவின் தேர்தல் பிரசாரத்துக்கு மாஜிக் நிபுணர்களின் நிகழ்ச்சிகள்

## மத்திய பிரதேசத்தில் அக்கட்சி புதிய உத்தி

போபால்,ஒக்.22

மத்திய பிரதேச சட்டமன்ற தேர்தல் பிரசாரத்தில் மாஜிக் நிபுணர்களை ஈடுபடுத்த பாரதீய ஜனதாக் கட்சி முடிவு செய்துள்ளது.

மத்திய பிரதேச சட்டமன்ற தேர்தல் வருகிற நவம்பர் 28ஆம் திகதி நடைபெற உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை டிசம்பர் 11 ஆம் திகதி நடைபெறும்.

இந்த நிலையில், தேர்தலுக்கான பிரசார பணிகளில் ஈடுபட ஆளும் பாரதீய ஜனதா கட்சி தீவிர ஆலோசனை மேற்கொண்டது. கடந்த 15 வருடங்களாக 3 முறை ஆட்சி செய்து வந்துள்ள அக்கட்சி தொடர்ந்து 4ஆவது முறையாகவும் ஆட்சியைப் பிடிக்க புதிய முயற்சியை மேற் கொள்ள உள்ளது.

அதன்படி, தேர்தல் பிரசாரம் மற்றும் கட்சி விளம்பரத்திற்காக மாஜிக் நிபுணர்களைப் பயன் படுத்த முடிவு செய்துள்ளது. இதுபற்றி அக்கட்சியின் மாநில செய்தி தொடர்பு நிர்வாகி ரஜனீஷ் அகர்வால் செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, பிரசாரம் மற்றும் பொது மக்களைக் கவர மாஜிக் நிபுணர் களை வாடகைக்கு அமர்த்தத்திட்டமிட்டு உள்ளோம்.

அவர்கள் கிராம மற்றும் வளர்ந்து வரும் நகர பகுதிகளில், சந்தை பகுதிகளில் வாக்காளர்களைக் கவரும் வகையில் மாஜிக் ஷோக்கள் நடத்துவார்கள் எனக் கூறியுள்ளார்.

கடந்த 1993 மற்றும் 2003க்கு இடைப்பட்ட 10 ஆண்டுகளில் காங்கிரஸ் அரசின் ஆட்சியில் இருந்த மோசம் நிறைந்த நிலையிலான சாலைகள், மின் விநியோகம் மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை எடுத்து சொல்லும் வகையில் இந்த நிகழ்ச்சிகள் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

# நின்ற லொறி மீது மோதிய கார் ஒரே குடும்பத்தில் மூவர் சாவு



திண்டிவனம்,ஒக்.22

தமிழ்நாடு, திண்டிவனம் அருகே சாலையோரம் நின்று கொண்டிருந்த சரக்கு லொறி மீது கார் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

சென்னை குன்றத்தூரைச் சேர்ந்தவர் விஜயகுமார் (29). இவர் தனது ஒரு வயது குழந்தை ஞானிக்கு குடும்பத்தினருடன் தேனி மாவட்டத்திலுள்ள குல தெய்வம் கோயிலில் காது குத்தியுள்ளனர். பிறகு தொடர்விடுமுறை என்பதால், ஊட்டிக்குச் சுற்றுலா சென்றுள்ளனர். சனிக்கிழமை காலை இரண்டு கார்களில் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மீண்டும் சென்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அப்போது சாரம் அருகே சாலையோரம் நின்று கொண்டிருந்த சரக்கு லொறி மீது கார் மோதியது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த விஜயகுமார், அவரது மனைவி சபரி (25), சபரியின் தாயார் ராமலட்சுமி (45) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்த சென்னை குன்றத்தூர் பகுதியைச் சேர்ந்த ஜான்சன் சாமுவேல் (28), அவர் மனைவி அன்சி (24) பூசாரி கவுண்டன்பாளையத்தைச் சேர்ந்த அருண்குமார் ஆகியோர் மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் ஒரு வயது குழந்தை ஞானி காயமின்றி உயிர் தப்பியது.

# டயர் வெடித்ததால் தாறுமாறாக ஓடிய கார் பேருந்துக்கு நின்ற நால்வரைப் பந்தாடியது

## தாய், மகள், பேத்தி, கொள்ளுப்பேரன் சாவு

மதுரை,ஒக்.22

மதுரை அருகே பேருந்து நிறுத்தத்தில் பேருந்துக்காக காத்திருந்தபோது கார் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், பேத்தி, கொள்ளுப்பேரன் ஆகிய 4 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.






மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகேயுள்ள வடிகப்பட்டி பகவதியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் முத்தன் மனைவி மரத்தி (வயது 60). இவரது மகள் லெட்சுமி (45). இவருக்குத் திருமணமாகி வசந்தி (22) என்ற மகள் உள்ளார். இவரை அதே பகுதியை சேர்ந்த ஜெயபாண்டி என்பவருக்குத்திருமணம் செய்து கொடுத்துள்ளனர். இவர்களுக்கு அத்விக் என்ற 8 மாத கைக் குழந்தை உள்ளது. மரத்திக்கும், அத்விக்கிற்கும் உடல்நிலை சரியில்லாததால், தாய், மகள், பேத்தி, கொள்ளுப்பேரன் ஆகியோர் குடும்பமாக சனிக்கிழமை காலை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து மதுரை – சேலம் நான்கு வழிச்சாலைக்கு நடந்து வந்துள்ளனர். சாலையைக் கடந்து எதிர்புறம் மதுரை செல்வதற்கான பேருந்து நிறுத்திற்குச் சென்றுள்ளனர். பேருந்துக்காக சிறிது நேரம் காத்திருந்தனர்.

அப்போது, மதுரையிலிருந்து கோவையை நோக்கிச் சென்ற கார், திடீரென்று தாறுமாறாக ஓடி பேருந்து நிறுத்தத்தில் மோதி அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில், சம்பவ இடத்திலேயே லெட்சுமியும், அவரது தாய் மரத்தியும் பரிதாபமாக உயிரிழந்தனர். வசந்தியும், கைக்குழந்தை அத்விக்கும் படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடினர். அவர்களை அக்கம்பக்கத்தினர் மீட்டு வாடிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்குள் அவர்களும் இறந்துவிட்டனர். அதிர்ஷ்டவசமாக காரில் வந்தவர்கள் லேசான காயத்துடன் உயிர் தப்பினர். தகவலறிந்த வாடிப்பட்டி போலீஸார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

முதல்கட்ட விசாரணையில், வடுகப்பட்டி பஸ்நிறுத்தம் அருகே கார் வந்தபோது காரின் இடது பக்கம் முன் டயர் பஞ்சராகிவிட்டது. பஞ்சாரானதால் கார் நிலை தடுமாறி அவர்கள் மீது மோதியது தெரியவந்துள்ளது. பேருந்துக்காக காத்திருந்தபோது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், பேத்தி, கொள்ளுப்பேரன் ஆகியோர் கார் மோதி பலியான இந்த சம்பவம், அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பாலியல் குற்றச்சாட்டால் மனமுடைந்து ஆணுறுப்பைத் தானே வெட்டிய சாமியார்



உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு சாமியார் மீது அவரது உறவுப் பெண்ணே பாலியல் புகார் கூறியதால் மனவேதனை அடைந்த சாமியார் திடீரென தனது ஆணுறுப்பை தானே அறுத்து கொண்டார். அதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உபி மாநிலத்தில் உள்ள காம்லின் என்ற கிராமத்தில் மாதானி பாபா என்ற சாமியார் உள்ளார். இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் இவரிடம் அடிக்கடி வந்து ஆசி பெறுவது உண்டு.

இந்த நிலையில் இந்தச் சாமியாரின் உறவுக்கார பெண் ஒருவர் சாமியார் மீது பாலியல் குற்றச்சாட்டைக் கூறியமையால் பரபரப்பு ஏற்பட்டது. சாமியார் தன் மீது எந்தக் குற்றமும் இல்லை என்று சொல்லிப் பார்த்தும் அந்த பகுதியில் உள்ளவர்கள் நம்பவில்லை. இதனால் தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கத் திடீரெனத் தனது ஆணுறுப்பை அறுத்து கொண்டார். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாதானி, தான் ஆசிரம் ஒன்றைக் கட்டி வருகிறார் எனவும், இதனைப் பிடிக்காத சிலர் தன் மீது பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்துகின்றனர் எனவும் கூறியுள்ளார்.

# தி.மு.க.செயலர் அன்பழகன் மருத்துவமனையில் அனுமதி



சென்னை, ஒக்.22

தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் உடல்நலக்குறைவால் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளராகப் பதவி வகித்து வரும் பேராசிரியர் க. அன்பழகனுக்கு நேற்று முன்தினம் இரவு திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டார். உடல்நிலை ஒத்துழைக்காத காரணத்தால் கட்சியின் முக்கிய கூட்டங்களை தவிர மற்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் ஓய்வெடுத்து வருகிறார்.

நேற்று முன்தினம் இரவு சென்னை கிரீம்ஸ் ரோட்டில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தகவல் அறிந்த தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் மருத்துவமனைக்கு நேரில் சென்று, அவரது உடல்நிலை குறித்து கேட்டறிந்தார்.

அன்பழகனுக்கு காய்ச்சல் குறைந்துள்ளது எனவும், சில நாள்கள் தங்கி ஓய்வு எடுக்க வேண்டி உள்ளதால் அவரைச் சந்திக்க தொண்டர்கள் யாரும் வரவேண்டாம் எனவும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

# திருடப்பட்ட 9 ஐம்பொன் சாமி சிலைகள் 13 ஆண்டுகளின் பின்னர் மீட்கப்பட்டன



நெல்லை,ஒக்.22

2005ஆம் ஆண்டு நெல்லை மாவட்ட கோயில்களில் திருடப்பட்ட 13 ஐம்பொன் சிலைகளில் 9 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. சிலை கடத்தல் தடுப்புப்பிரிவு ஐஜி பொன்.மாணிக்கவேல் தலைமையிலான குழுவினர் சிலைகளை மீட்டனர்.

பல கோடி ரூபா மதிப்புள்ள இச்சிலைகளை வெளிநாடுகளுக்கு விற்று அவை மீண்டும் சென்னையில் விற்கப்பட்டமை விசாரணையில் அம்பலமாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# சிறுவர் மீதான வன்முறைகள் அதிகரிப்பும் காரணங்களும்

## வவுனியா மாவட்டத்தின் நிலைமை குறித்து ஒரு மதிப்பீடு


வவுனியா அரச அதிபர் எம்.ஐ.ஹனீபா

சிறுவர் வன்முறை மற்றும் துஷ்பிரயோகம் என்பது இன்று பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வருவதனை நாளாந்தம் அறிய முடிகின்றது. வேலைத்தளங்கள், வியாபார நிலையங்கள், பாடசாலைகள், சிறுவர் இல்லங்கள் என அவை நீண்டு சென்று இன்று வீட்டுக்குள் அவை அரங்கேறத் தொடங்கி விட்டன. சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துல், பாலியல் தொல்லை கொடுத்தல், சிறுவர்களை வேலைவாங்குதல், சிறுவர்களை துன்புறுத்துதல், சிறுவர்களுக்கு அடித்தல், சிறுவர்களின் மனத்தை பாதிக்கும் வகையில் செயற்படல், மன உளைச்சலை ஏற்படுத்தல் என பல வடிவங்களில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும் நடைபெறுகின்றன. இவை அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்வதை அவதானிக்கவும் முடிகிறது.

இலங்கையில் நாளாந்தம் 16 வயதிற்கு குறைந்த 4 சிறுமிகள் பாலியல் வன்புணர்ச்சிக்குட்படுத்தப்படுகிறார்கள் என அரச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக கடந்த இரண்டு வருடத்துக்குள் சிறுவர் பாலியல் வன்புணர்ச்சி உட்பட சிறுவர் துஷ்பிரயோகம் 5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2017, 2018 ஆம் ஆண்டில் 1089 சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்புணர்ச்சி மற்றும் சிறுவர் வன்முறைகள் தொடர்பான முறைபாடுகள் வவுனியா மாவட்ட செயலக புள்ளி விவரங்களில் பதிவாகியுள்ளது.

இதில் பாடசாலை இடைவிலகியவர்கள் தொடர்பாக 230 முறைப்பாடுகள்இ 18 வயதிற்கு உட்பட்டவர்கள் திருமணம் செய்யாமல் குழந்தைபெற்றவர்கள் தொடர்பான 26 முறைப்பாடுகள், உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டவர்கள் தொடர்பான 126 முறைப்பாடுகள், மனரீதியாக துன்புறுத்தப்பட்டவர்கள் தொடர்பான 159 முறைப்பாடுகள், துஷ்பிரயோகங்கள் தொடர்பாக 28 முறைப்பாடுகள், புறக்கணித்தல் தொடர்பாக 175 முறைப்பாடுகள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பான 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இம்முறைப்பாடுகள் பல்வேறு வழிகளிலும் கிடைக்கப்பெற்றுள்ளன. அதில் தலைமை காரியாலயத்தில் 65 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளதுடன், சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான இலவச தொலைபேசி இலக்கமான 1929 மூலம் 97 முறைப்பாடுகளும், அலுவலக மற்றும் உத்தியோகத்தர்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக 248 முறைப்பாடுகளும், கிராம, பிரதேச மட்ட அமைப்புகள் மற்றும் சிறுவர் பெண்களுடன் தொடர்புடைய அமைப்புக்கள் மூலம் 208 முறைப்பாடுகளும் கிடைக்கப்பட்டுள்ளன. இதில் 299 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளமையுடன், 224 முறைப்பாடுகளுக்கு தற்காலிக தீர்வு எட்டப்பட்டவையாகவும், 193 முறைப்பாடுகள் தலைமை காரியாலயங்களுக்கு தீர்வுக்காக அனுப்பப்பட்டும் உள்ளன. இதில் 90 சதவீதமான முறைப்பாடுகள் வன்புணர்ச்சிகள் நியதிச் சட்ட வன்புணர்ச்சிக் குற்றங்களாகும். அதாவது 16 வயதுக்கு குறைவான ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அந்தப் பெண்ணின் சம்மதத்துடன் பாலுறவு கொண்டாலும் அது நியதிச் சட்ட வன்புணர்ச்சிக் குற்றமாகும். 16 வயத்திற்கு மேற்பட்ட ஒரு பெண்ணுடன் ஒரு ஆண் அப்பெண்ணின் சம்மததுடன் பாலுறவு கொண்டால் அது வன்புணர்ச்சி ஆகாது என்பது சட்ட வரைவிலக்கணமாகும்.

| முறைப்பாட்டின் தன்மை | எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2017 | 2018 (மார்ச் வரை) |
| பாடசாலை இடைவிலகல் | 230 | 65 |
| 18 வயதின் கீழ் திருமணம், கர்ப்பம் | 26 | 6 |
| உடல் ரீதியான துன்புறுத்தல் | 126 | 9 |
| மனரீதியான துன்புறுத்தல் | 159 | 32 |
| பாலியல் துன்புறுத்தல் | 28 | 04 |
| புறக்கணித்தல் | 175 | 33 |
| சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல் | 03 | - |
| ஏனையவை | 05 | - |

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் கடந்த காலங்களை விட அதிகரித்து வருகின்றன. தொலைபேசிப் பாவனை, இணையம், போதைவஸ்து பாவனை, தவறான நண்பர் கூட்டம் என்பன இந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளமையுடன் பெற்றோர்கள் சரியான முறையில் தமது பிள்ளைகளைக் கண்காணிக்காமையும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறத் துணைபுரிந்துள்ளன என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஐ.ஹனீபா தெரிவித்துள்ளார்.







பொதுவாக பெண்கள் தாம் விருப்பத்துடன் ஒன்று சேர்ந்தாலும் அது வெளியில் தெரிய வரும் போது பெண்கள் தாங்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் பாலாத்காரமாக பாலுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற பெண்கள், சிறுவர் தொடர்பான விடயங்கள் அதிகமாகவுள்ளன. பாலியல் உறவு என்பது திருமணத்தினூடாக சட்டரீதியாகவும், திருமணத்திற்கு அப்பால் சம்பந்தப்பட்ட தரப்பினரின் பூரண சம்மதத்துடனும் மேற்கொள்ளப்படுகின்ற போது, அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. உயிரினங்களுக்கு இயற்கையாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய உடல், உளத்தேவையாக பாலுறவு அமைகிறது. இதனை பிள்ளைகளை பெற்றுக்கொள்வதற்கான அதாவது மறு உற்பத்திகான ஓர் உறவே பாலுறவு எனலாம்.

பெண்கள் காட்சிப்படுத்தலுக்குரிய பண்டமாகவும், பாலியலுக்குரிய நுகர்வுப் பண்டமாகவும் முதலாளித்துவ சமூகத்தின் அபிவிருத்தியின் விளைவாக மாற்றப்பட்டுள்ளனர். இதில் பெருபாலான சிறுவர்களும், பெண்களும் வயது வந்த இரு பாலாரினதும் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பலவீனமான, வசதியான பண்டங்களாக்கப்பட்டுள்ளனர். இந்தப் பின்புலத்தில் இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள பாலியல் துஷ்பிரயோகங்களை பொருளாதாரம், அரசியல், பண்பாடு, சுகாதாரம் மற்றும் மனோவியல் ரீதியாகப் பார்ப்பதன் மூலம் அதனை கட்டுப்படுத்தி நீண்ட காலத்தில் இல்லாமல் செய்வதற்கான ஒரு சமூகத்தை படைக்கும் நோக்கத்துடன் முன்னேற முடியும்.




- சி.திவ்வியா -

பெரும்பாலான பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் பிரிந்து வாழ்வோராகவோ, வெளிநாட்டில் பணி புரிவோராகவோ உள்ளனர். பாதிக்கப்பட்டோர் கூடுதலாக குறைந்த வருமானங்களில் வாழும் குடும்பங்களை சேர்ந்தவர்கள். யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரான காலப் பகுதியில் பெண்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக பொருளாதாரப் பிரச்சனை காணப்படுகின்றது. இப்பொருளாதார பிரச்சினை காரணமாக பல பெண்கள் தமது குடும்பங்களையும், பிள்ளைகளையும் பிரிந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாக செல்கின்றார்கள். இவ்வாறு செல்பவர்களில் சிலர் முறையான அனுமதி பெற்று செல்கின்ற அதேவேளை, இன்னும் சிலர் முறையான அனுமதிகளைப் பெறாது முகவர் ஊடாக செல்கின்றார்கள். இவர்கள் சென்ற பின்னும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்ற சிலர் வீடு திரும்பாமையும், சிலர் சடலமாக மீண்டு வந்தையும் நாம் நாளாந்தம் அறியக் கூடியதாகவும் உள்ளது. இவ்வாறு செல்பவர்கள் தமது எதிர்காலம் குழந்தைகள், தமக்கு இதனால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து போதியளவில் சிந்திக்க தவறி விடுகின்றனர். இத்தகைய பெண்கள் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாக கொள்கின்றார்களே தவிர, தமது குடும்பம் இதனால் சீரழியும் என்பதை துளியளவும் நினைப்பதில்லை. இதனால் தனித்து விடப்படுகின்ற பிள்ளைகள் பல ஆபத்துக்களை சந்திக்கின்றார்கள்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் வாழும் 14 வயதில் துன்புறுத்தலுக்குள்ளான சிறுமி ஒருவர் தெரிவிக்கையில், "எனது அப்பா கூலி வேலை செய்கிறார். எனக்கு மூன்று சகோதாரர்கள். குடும்ப வறுமை காரணமாக எனது அம்மா மத்திய கிழக்கு நாட்டிற்கு வேலைவாய்ப்புக்கு சென்றுள்ளார். இதன்பின் நாம் பாட்டியுடனேயே வசித்து வந்தோம். அம்மா போனதில் இருந்து அப்பாவும் ஒழுங்காக வீட்டிற்கு வருவதில்லை. பாட்டியும் கூலி வேலைக்கு செல்கின்றார். வீட்டில் ஒருவரும் இல்லாத நேரம் பக்கத்து வீட்டு அண்ணா வந்து எங்களுடன் நின்று என்னைத் தவறாகப் பயன்படுத்தினார். பல தடவை அவ்வாறு நடந்த பின்னரே பாட்டியிடம் தெரியப்படுத்தி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டோம். தற்போது இந்த பிரச்சினையால் நான் பாடசாலை செல்வதில்லை" – எனத் தெரிவித்தார்.

தாய்மார் வெளிநாடு சென்றதும் கணவன் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகள் அந்த குடும்பத்தின் வாழ்க்கையையே மாற்றி விடுகின்றன. என்ன தான் பணத்தைச் சம்பாதித்தாலும் மீண்டும் வாழ்க்கையை கட்டியெழுப்ப முடியாத நிலையே இருக்கிறது. இவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக வெளிநாடு செல்கிறார்கள். இங்கு கணவன்மார் போதைக்கு அடிமையாகிறார்கள். பலருடனான தவறான தொடர்பு, மறுமணம், சிறுவர் துஷ்பிரயோகம் என அவர்களது காலங்கள் சீரழிகின்றன. சிறுவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகும் சந்தர்ப்பங்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும், இளவயதுத் திருமணங்களும், விவாகரத்துக்களும் ஏற்படுகின்றன.

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் வசிக்கும் 15 வயது சிறுவன் ஒருவர் தெரிவிக்கையில், "எனக்கு அப்பா இல்லை. அம்மா கூலி வேலைக்கு தான் செல்கின்றார். எனக்கு 3 சகோதாரர்கள். அம்மாவின் வருமானம் எமது குடும்பத்திற்கு போதாது. அதனால் நான் பாடசாலையில் இருந்து இடைவிலகி தற்போது கூலி வேலைக்கு செல்கின்றேன். எமது குடும்ப நிலை காரணமாக எனது படிப்பும் இடையில் நின்றுள்ளது." – எனத் தெரிவித்தார். *(மிகுதி நாளை)*

# சுஷ்மா, ராஜ்நாத் சிங், டோவலுடன் பிரதமர் ரணில் தனித்தனியாக பேச்சு



புதுடில்லி, ஒக். 22

இந்தியாவுக்குப்பயணம்மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் முற்பகல், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோருடன் தனித்தனியாகப்பேச்சு நடத்தினார்.

இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கிற்கும், இலங்கை பிரதமருக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புமற்றும்தீவிரவாதத்துக்கு எதிரான ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தியவெளிவிவகாரஅமைச்சர் சுஷ்மாசுவராஜுக்கும், இலங்கை பிரதமருக்கும் இடையிலான சந்திப்பின்போது, இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுடனும் இலங்கைப் பிரதமர் பேச்சுக்களை நடத்தியிருந்தார். எனினும், முக்கியத்துவம் மிக்க இந்தப்பேச்சுக்களின் விவரங்கள் ஏதும் வெளியாகவில்லை.

இந்தச்சந்திப்புகளில்இலங்கை அமைச்சர்கள் சாகல ரத்நாயக்க, அர்ஜுன ரணதுங்க, மலிக் சமரவிக்ரம மற்றும் இலங்கை அதிகாரிகளும், இந்திய அதிகாரிகளும் பங்கேற்றனர். (ஐ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வடமராட்சியில் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 22

வடமராட்சிமுன்பள்ளிஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்த்தன் நன்றி தெரிவித்தல் நிகழ்வும் பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, சரவணபவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்த நிகழ்வில் புதிய அரசமைப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சிறப்புரை ஆற்றியிருந்தார்.

# 4 மணி நேர சுற்றிவளைப்பு; 3 ஆயிரத்து 560 பேர் கைது

கொழும்பு, ஒக். 22

நாடளாவிய ரீதியில் நேற்று அதிகாலை 3.00 மணி முதல் காலை 7.00 மணி வரை பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 3,560 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனபொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

வாகனப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றத்தின் பேரில் 6,020 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய 18,019 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்டு இந்த விடே சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் கூறியது. (ஐ)

# வவுனியா திறந்த பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ்கள்



வவுனியா, ஒக். 22

வவுனியா திறந்த பல்கலைக் கழகத்தில் பயிற்சியைப் பூர்த்தி செய்த 82 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வவுனியா கிளையினால் நடத்தப்பட்ட ஆங்கிலம், மனிதவள முகாமைத்துவம் உள்ளிட்ட குறுகிய காலசான்றிதழ் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த 82 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா கற்கை நிலைய உதவிப் பணிப்பாளர் வ.திவாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன் உள்ளிட்ட கல்வித்துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# பொய்யான தகவல்கள் வழங்கிய அமைச்சர்கள் யாரென்று தெரியும்

## கூறுகிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர



கொழும்பு, ஒக். 22

இந்தியாவின் உளவுத் துறையான றோ அமைப்புடன் தொடர்புடைய இரு அமைச்சர்களே ஜனாதிபதி தொடர்பான பொய்யான தகவல்களை அமைச்சரவையிலிருந்து வழங்கியுள்ளனர் எனவும், அவர்கள் தொடர்பான பெயர்களை மிக விரைவில் வெளிப்படுத்தவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரவையில் பேசியதாகப் பொய்யான தகவல் வழங்கிய அமைச்சர்கள் நான்கு பேரில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களை விரைவில் வெளியிடவுள்ளோம்.

இந்த இருவர் தொடர்பிலும் ஜனாதிபதியும், பிரதமரும் தீர்க்கமான முடிவொன்றை எடுக்க வேண்டும்–என்றார். (ஐ)

# தொல்பொருள் அகழ்வில் ஈடுப்பட்ட ஐவர் கைது

கொழும்பு, ஒக். 22

உடவலவ, கோமாரினய பகுதியில் சட்டவிரோதமாகத் தொல்பொருள் அகழ்வுகளில் ஈடுபட்ட ஐவரை உடவளவ பொலிஸார் கைது செய்துள்ளமையுடன் அகழ்வுக் கெனப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களயும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் ஒரு மணியளவில் உடவலவ பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 34, 41, 48, 51 மற்றும் 52 வயதுடையவர்கள் எனவும், இவர்கள் கோமாரினய, உம்பிலிபிட்டிய, மற்றும் கொழபகேஹர போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உடவளவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் தனியார் பஸ் நேற்று குடை சாய்ந்து விபத்து



வவுனியா, ஒக். 22

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் தனியார் பஸ்ஸொன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதி ஊடாக வவுனியா நகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ் மடுகந்தைப் பகுதியில் பயணித்தபோது வேகக் கட்டுப்பட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது பஸ்ஸில் மூவர் மாத்திரமே பயணித்திருந்த நிலையில் மூவரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# தவறவிட்ட தருணங்கள்

## தசுன் சானக கவலை



இங்கிலாந்திற்கு எதிரான நான்காவது ஒரு நாள்போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் இலங்கை அணி தொடரை இழந்துள்ள நிலையில் அணி தவறவிட்ட சந்தர்ப்பங்கள் குறித்து சகலதுறை வீரர் தசுன் சானக கவலை வெளியிட்டுள்ளார்.

தசுன் சானக 66 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தமை ஆட்டத்தின் போக்கை மாற்றியது. இது குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நான் அந்த ஓட்டத்தைப் பெறுவதற்காக ஓடியிருக்கவேண்டிய அவசியமிருக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நான் நீண்ட தூரம் ஓடிவிட்டேன். நான் வழமையாக இந்த தவறைச் செய்கிறேன். பந்து வீச்சாளர் பந்து வீச ஓடும்போது நான் முன்னோக்கிச் சென்றுவிடுகிறேன். இதனைச் சரிசெய்ய வேண்டும். - என அவர் குறிப்பிட்டார்.

நான் ஆட்டமிழக்காமல் தொடர்ந்தும் விளையாடியிருந்தால் போட்டியின் முடிவு எங்களுக்கு சாதகமாக மாறியிருக்கும் நான் திசர பெரேராவுடன் நிலைத்து விளையாடியிருந்தால் நாங்கள் 290 -300 ஓட்டங்களைப் பெற்றிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

# 2023 உலகக் கிண்ணத்துக்கு 10 அணிகள் மட்டுமே ஐ.சி.சி. திட்டவட்டம்

International Cricket Council

2023ஆம் ஆண்டு நடக்க விருக்கும்ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடரும் 10 அணிகள்கொண் டதாகவே இருக் கும் என ஐ.சி.சி. திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அதாவது 10 அணிகள் என்றால் நேரடியாக உலககிண்ணத் தொடருக்கு தரவரிசைப் பட்டியல் மூலம் தேர்வாகும் அணிகள் மட்டுமே போட்டி இடம்பெறும் என அறி விக்கப்பட்டுள்ளது.

மேலும் 2023ஆம் ஆண்டு உலக கிண்ண தொடரில் மொத்தம் 18 அணிகள் தகுதி பெற்று விளையாடும்.

தரவரிசைப் பட்டியல் மூலமும் டிவிசன் போட்டி யிலும் தகுதி பெற்று உலக கிண்ண தொடரில் நுழை யும் இறுதி இருக்கும் 5 இடங்களுக்காக 32 அணிகள் போட்டி போடும்.

இதில் 3 அணிகளுக்கு எளிதான மற்றும் புள்ளி களின் அடிப்படையில் தகுதி வாய்ப்பு வழங்கப்படும். மீதமிருக்கும் 5 இடங்களுக்கு 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரை 372 போட்டிகள் நடத்தப்பட்டு 32 அணி களில் ஐந்து அணிகள் தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த அறிக்கையை ஐ.சி.சி. நேற்று அறிவித்துள்ளது. இதற்கு முன்னதாக நேரடியாக தகுதிபெறும் முடிவிற்காக கடுமையாக விமர்சிக்கப்பட்டது. உறுப்பு நாடுகள் இதன் மூலம் கடும் ஏமாற்றமடைந்தது.

தற்போது 2023ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் உலககிண்ணமும் அதன்படியே நடைபெறும் என அறிவித்துள்ளது. மேலும் மேலும் உறுப்பு நாடுகள் ஏமாற் றம் அடைந்துள்ளனர்.

# குயின்டன் டி கொக்கை அடுத்து தவானை குறிவைக்கும் மும்பை!



இந்திய ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மற்றும் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் வீரர் ஷிகர் தவானை வாங்குவதற்கு மும்பை இந்தியன்ஸ் அணி திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே, 2019 ஆம் ஆண்டுக் கான இந்தியன் ப்ரீ மியர் லீக் ஐ.பி.எல். போட்டிக்காக தென்னாபிரிக்க வீரர் குயின்டன் டி கொக்கை பெங்களூர் அணி யிடம் இருந்து மும்பை இந்தி யன்ஸ் வாங்கியது.

கடந்த 2018 ஐ.பி.எல். போட்டி யின் போது தென்னாப்பிரிக்க அதிரடி வீரர் குயின்டன் டி கொக்கை ஏலத்தில் 2.8 கோடி ரூபாய் கொடுத்து ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் வாங்கியது. தற்போது அதே விலைக்கு குயின்டன் டி கொக்கை மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கியது.

பெங்களூர் அணி இதற்காக குயின்டன் டி கொக்கை விடுவித்துள்ளது என ஐ.பி.எல். வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

மேலும் இந்த பரிமாற்றத்துக்காக பங்களாதேஷ் வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிஸுர் ரஹ்மானை 2.2 கோடிக்கும், இலங்கை சுழற்பந்துவீச்சாளர் அகில தனஞ்சயவை 50 லட்சத்திற்கும் மும்பை இந்தியன்ஸ் விடுவித்துள்ளது.

எவின் லீவிஸுடன் இணைந்து குயின்டன் டி கொக் ஆடுவது மும்பை அணிக்கு கூடுதல் பலத்தை தரும். குயின்டன் டி கொக்கை ஏற்கெனவே டில்லி, ஹைதரா பாத் அணிகள் பங்கேற்றுப் பலப்படுத்தியுள்ளன.

மொத்தம் 34 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடிய அவர் 1 சதம், 6 அரை சதங்களுடன் மொத்தம் 927 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

இந்நிலையில் ஷிகர் தவானை வாங்க மும்பை இந்தி யன்ஸ் அந்த முடிவு செய்துள்ளமை அணிக்கு மேலும் ஒரு பலமாக அமைந்துள்ளது.

# ரிப் பந்த்துக்கு தொப்பி அணிவித்தார் டோனி

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் இடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் அறிமுக வீரராக ரிப் பந்த் களமிறங்கி யுள்ளார்.

இவர் இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் அணி யின் முன்னாள் தலைவர் டோனி தொப்பி அணிவித்து அவரை அணியில் இணைத்துக் கொண்டார்.

2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியை



இலக்கு வைத்து காய் நர்த்தி வரும் இந்தியா அணி, ஒரு வலுவான வீரர்களை தேர்தெடுத்து வருகின்றது.

அந்தவகையில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஷிகர் தவான் மற்றும் ரோஹித் சர்மா சிறப்பாக விளை யாடி வரும் நிலையில், உலககிண்ணத்திற்கு முன்னர் உள்ள 18 போட்டிகளில் அணியின் 4 ஆம் இலக்க துடுப்பாட்ட வீரர்களை தேர்தெடுக்க வேண்டிய நிலை யில் இந்திய அணி உள்ளது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டிகளில் இந்தியா அணிக்கு வெற்றி வாய்ப்பிக்கு அதிக பங்கினை ரிப் பந்த் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இந்த ஒருநாள் தொடரிலும் சிறப்பாக விளையாடினால் அவர் உலகக்கிண்ணம் வரை நீடிக்க வாய்ப்பு இருக்கும், இல்லையேல் மாற்று வீரர்கள் அணியில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என் பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலும் ஸ்கேட்டிங்





கொழும்பு, ஒக். 22

ஸ்கேட்டிங் விளையாட்டு உலகின் பல நாடுகளில் புகழ்பெற்ற விளையாட்டாகக் காணப்படுகின்றது.

இலங்கையிலும் இந்த விளையாட்டை ஊக்கு விக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு அமைவாக எதிர்வரும் நவம்பர் மாதம் தேசிய அளவில் ரோல்போல் போட்டிகளை நடத்துவதற் கான ஒழுங்குகளை இலங்கை ரோல்போல் சம்மேள னம் செய்துள்ளதாக சம்மேளனத்தின் பொதுச் செய லாளர் பீ.தேவேந்திரன் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir



## சிதைந்துவிட்டது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டிலும் உள்ள தமிழ்த் தேசிய உணர்வாளர்களை ஒன்றிணைத்து, தழிர்களின் சுயநிர்ணய உரிமையை அடைவதற்கான பாதையில் பயணிக்க ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்படுபவர்கள், வெளியேறுபவர்கள், தமக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

– இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகச் செயலாளர் நாயகம் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

தனது புதிய கட்சியின் கொள்கைப் பிரகடன உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகளுடன் உள்ள உறுப்பினர்கள், கட்சியில் இருந்து வெளியேறவேண்டும். கூட்டமைப்பில் இருந்து வெளியேறுபவர்கள் அல்லது வெளியேற்றப்படுபவர்கள், இன்னொரு கட்டமைப்பை உருவாக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

திட்டமிட்ட குடியேற்றம், பேரினவாதச் சூழ்ச்சிகளின் மத்தியில் வடக்கு – கிழக்கில் நீண்டகாலமாக வாழ்ந்து வரும் பேராதிக்க ஒடுக்குமுறைகளை இல்லாதொழித்து, தமிழ் மக்களின் தேசிய வேணவாக்களை உருவாக்கும் வகையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக் கொண்ட அதிகபட்ச சுயாட்சியை வென்றெடுப்பதே பிரதான அரசியல் நோக்கம்.

வடக்கு – கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமைகள், தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் குறிப்பாகவும், பண்பாட்டு ரீதியில் உறுதியாகவும் இருத்தல் வேண்டும். வடக்கு – கிழக்குக்கு வெளியில் வாழும் மலையக மக்களின் தேசிய உரிமைகளை உறுதி செய்வதற்கான நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலேயே எமது கட்சி செயற்படும்.

இவ்வாறான செயற்பாட்டுடன் செயற்பட்டால், இன ஒடுக்குமுறைகளை இல்லாதொழித்து, சுயாட்சி, சமத்துவம் என்ற அடிப்படையில் இலங்கை வாழ், அனைத்துத் தேசிய இனங்களிடையேயும் ஐக்கியத்தை வளர்க்க முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள சக்திகளுடனும் ஐக்கியப் பட்டு செயற்படுவோம்.

தமிழ் மக்களின் மாற்றத்திற்காகவும், சமூக மாற்றத்திற்காகவும் செயற்படும் அமைப்புகளுடனும், இனப்படுகொலையை வலியுறுத்தும் அமைப்புகளுடனும், ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதுடன், தமிழ் மக்களின் வேணவாக்களையும், அயல் நாடுகளினதும் மக்களினதும் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இந்திய அரசு மற்றும் தமிழக மக்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உட்கட்சி ஜனநாயகம், கொள்கைப் பற்றுறுதி ஆகியவற்றைப் பேண வேண்டும். கொள்ளைகள் நாளடைவில் மாற்றமடைந்து சென்று மக்களின் தேவைகள் புறக்கணிக்கும் விதமாக வரும் அரசியலை எமது மக்கள் வெறுக்கத் தொடங்கி விட்டார்கள்.

கடந்த சில வருடங்களில் தமிழ் தேசிய அரசியலில் ஏற்பட்ட தவறுகள், தடம்புரள்வுகள், எமது மக்களின் மனங்களில் ஆழப் பதிந்துவிட்டன. இதற்குரிய தீர்வினை முதலில் கண்டறிய வேண்டும்

குறிப்பிட்ட விடயங்களுக்காக ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தினை பலமாக கட்டி வளர்ப்பதுடன், தேசிய வேணவாக்களை வென்றெடுக்க தனி நபர்களையோ, அமைப்புக்களையோ நம்புவதை விட முழுமையாக மக்களை மையப்படுத்திய புதிய வழிமுறைகளுடன் முன்னேற வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் சிதைந்து போயுள்ளதால், உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள தமிழ் தேசிய உணர்வாளர்கள், தமது தமிழ் தேசிய உணர்வை அடைவதற்காக பல்வேறு திசைகளில் பயணிக்கத் தொடங்கியுள்ளார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்க வேண்டிய அத்தியாவசியம் இந்தக் காலகட்டத்தில் எழுந்துள்ளது.

இந்தக் கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கு அனைவரின் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் – என்றார். (ஐ-07)

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கோரி மலையக மக்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்ற நிலையில், அவர்களுக்கு ஆதரவாகவும் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் முன்பாக போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக ஒருங்கமைத்து இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

நேற்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமது அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். எனினும் முதலாளிமார் சம்மேளனம் குறுகிய சம்பள ஏற்றத்தைப் பரிந்துரைத்து தொழிலாளர்களின் போராட்டத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டு வருகின்றது. (ஐ-07)

## அம்மாச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.கோவில் வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபை கடந்த ஐந்து வருடங்களில் உருப்படியாகச் செய்த காரியம் அம்மாச்சி எனும் உணவகம்தான் என்று முகநூலில் ஒருவர் வெளிப்படுத்தியதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் உண்மையில் மத்திய அரசின் நிதியில்–மத்திய அரசின் திட்டத்திற்கமையவே அந்த உணவகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆனால் அதன் பெயரைத் தான் வடக்கு மாகாண சபை அம்மாச்சி என்று மாற்றி வைத்திருக்கிறது. அதாவது நாட்டிலுள்ள எட்டு மாகாணங்களில் சிங்களப் பெயரிலேயே இந்த உணவகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனையே வடக்கில் அம்மாச்சி என்று பெயரை மாற்றி வைத்திருக்கின்றனர்.

அதற்காக தமிழ்ப் பிரதேசமான இங்கும் சிங்களப் பெயரை வைக்கவேண்டிய அவசியமில்லை. ஆகையால் தமிழ்ப் பெரையே வைக்கவேண்டும். இங்கு அம்மாச்சி என்று அந்த உணவகங்களுக்குப் பெயர் வைக்கப்பட்டிருப்பதால் தொடர்ந்தும் அதே மாதிரியான பெயர்கள் தான் வைக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

கோண்டாவிலில் இந்த உணவகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான பெயரை 25 ஆம் திகதிக்குப் பின்னர் வைக்கலாம். அதேபோன்று வடக்கு மாகாணத்தில் இன்னும் பல உணவகங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன. அவற்றுக்கெல்லாம் அம்மாச்சி என்றுதான் வைக்கவேண்டுமென்றில்லை. அவற்றை பாரம்பரிய உணவகங்கள் என்று போடலாம். அதிலும் பாரம்பரியம் மிக்க உணவகம் என்று போடுவது நல்ல பெயராக இருக்கும்–என்றார். (ஐ-07)

## கோண்டாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் உப்புமடம் சந்தியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றின் மீதே நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

வியாபார நிலையத்துக்குள் புகுந்த கும்பல் பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியதுடன், பல சரக்குப் பொருள்களை சிந்திச் சேதாரப்படுத்திச் சென்றது. அத்துடன், வியாபார நிலையத்தின் முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியையும் அடித்துச் சேதப்படுத்திவிட்டு கும்பல் தப்பித்தது என்று கடையின் உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த கோப்பாய் மற்றும் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

வன்முறைக் கும்பல்களை அடக்குவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றபோதும் அவற்றின் அடாவடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. (ஐ)

## முள்ளிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடு ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை சுமூக நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ தெரிவித்தார்.

முள்ளிக்குளம் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன் விடுவிக்கப்பட்ட சுமார் 77 ஏக்கர் காணியில் மக்கள் நடமாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தக் காணி பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகளை நேற்று முன் தினம் தொடக்கம் கடற்படையினர் இடை மறித்து முட்கம்பிகளினால் வேலிகள் அடைத்து மக்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் முள்ளிக்குளம் ஆலயத்தில் நேற்றுக் காலை திருப்பலி நிறைவடைந்த நிலையில் மக்கள் மீண்டும் திரும்பிச் சென்றபோது கடற்படை முகாமில் இருந்த கடற்படையினர் அந்த வீதிகளினூடாகச் சென்ற மக்களை இடைமறித்தனர். இதனால் கடற்படையினருக்கும், முள்ளிக்குளம் மக்களுக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது.

சிறிது காலமாக முள்ளிக்குளம் மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டு வருகின்றது. தொடர்ச்சியாகக் கடற்கடையினர் பாதைகளை இடை மறித்து மக்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முள்ளிக்குளம் மக்களின் நடமாட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த கடற்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களுக்கு தொடர்ந்தும் முகம் கொடுத்து வருகின்றனர்.

உயர் அதிகாரியிடம் இருந்து வந்த உத்தரவுக்கு அமைவாகவே இந்தப் பாதைகளை மூடியதாகத் தெரிவித்த கடற்படையினர், மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து மூடி வைத்திருந்த வீதிகளை மீண்டும் மக்களின் பாவனைக்காகத் திறந்து விட்டுள்ளனர்.

எனவே மக்கள் பிரதிநிதிகள் உடனடியாக இந்த விடயத்தில் தலையிட்டு முள்ளிக்குளம் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு வழியமைத்துக் கொடுக்க வேண்டும் என முள்ளிக்குளம் பங்குத்தந்தை அருட்தந்தை லோரான்ஸ் லியோ மேலும் தெரிவித்தார்.

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிந்தியாவுக்கு நேரடி விமான சேவைகளை நடத்துவதற்கும், உதவி அளிப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளது.

மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றிருந்த பிரதமர் ரணில் நேற்று முன் தினம் இந்தியாவின் உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கைச் சந்தித்தபோதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் பிரதமர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்திய போது, பாதுகாப்பு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்போது, இலங்கைக்கு பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இந்தியா விரும்புவதாக உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

அத்துடன் ரோந்து நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் வகையில், சிறிலங்கா பொலிஸுக்கு 750 ஜீப் வாகனங்களை வழங்க இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திக்கு உதவி வழங்க இணக்கம் தெரிவித்த ராஜ்நாத் சிங், தென்னிந்தியாவில் இருந்து பலாலி மற்றும் மட்டக்களப்புக்கும் கூட நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்க இந்தியா உதவும் என்றும் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் குற்றங்களைக் குறைப்பதற்கு இந்தியா அளித்து வரும் ஆதரவுக்கு இலங்கைப் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இதன் விளைவாக, இலங்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் குற்றங்களின் எண்ணிக்கை 30 வீதத்தினால் குறைவடைந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு தாமதப்படுத்தி வருவதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடும் ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் பிற்பகல் புதுடில்லியில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்களின்போதே, இந்தியப் பிரதமர் தமது அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், செய்து கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை காட்டி வரும் தாமதம் குறித்தே இந்தியப் பிரதமர் தீவிரமான, ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளார்.

இராஜதந்திர விவகாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் பெரும் பகுதியை, இலங்கை விவகாரங்களுக்காக தாம் செலவழித்துள்ளார் எனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்திய அரசால் வழங்கப்பட்ட உதவி தொடர்பாக இலங்கை அரசின் செயற்பாடு தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தன்னைக் குறித்தோ, இந்திய அரசு குறித்தோ, ஏதேனும், கரிசனைகள் அல்லது சந்தேகங்கள் இருந்தால் அதனை தயக்கமின்றி கலந்துரையாடுமாறு இலங்கை பிரதமரிடம் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தின்போது, இந்தியப் பிரதமர் மோடி மீதோ அவரது அரசின் மீதோ – தாமோ அல்லது இலங்கையர்களோ, எந்தச் சந்தேகத்தையும் அல்லது பிரச்சினையையும் கொண்டிருக்கவில்லை என்று இலங்கை பிரதமர் பதிலளித்துள்ளார்

அத்துடன், ஏதேனும் தவறான புரிதலை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக இந்தியப் பிரதமரிடம் மன்னிப்பைக் கோருகிறார் எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

காத்மண்டுவில் அண்மையில் இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேசியபோது, 2017 புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பான எல்லா விவகாரங்கள் குறித்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாகவும் இந்தியப் பிரதமர் இந்தச் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

இதன்போது இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்த இலங்கை பிரதமர், அபிவிருத்தித்திட்டங்களை மூல இலக்குடன் மீண்டும் முன்னகர்த்த தேவையான நடவடிக்கைகளைத் தாம் துரிதமாக எடுப்பதாக இந்தியப் பிரதமரிடம் உறுதியளித்துள்ளார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம்' என்ற பெயரில், இந்தப் புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதி ஒன்றில், அனந்தி சசிதரன் தலைமையில் இடம்பெற்றது.

மதத் தலைவர்கள், முன்னிலையில் கொள்கைப் பிரகடனம் வாசிக்கப்பட்டு தொடங்கப்பட்ட இந்தக் கட்சியின் ஆரம்ப நிகழ்வில் 20 இற்கும் குறைவானவர்களே பங்கேற்றிருந்தனர் எனத் தகவல்கள் தெரிவித்தன.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக கடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு அனந்தி சசிதரன் அரசியலுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

அதே தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அறிமுகம் செய்யப்பட்ட நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனுக்கு மக்கள் மத்தியில் செய்யப்பட்ட அதீத அறிமுகம் போன்று அனந்தி சசிதரனுக்கும் அறிமுகம் கொடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளரின் மனைவி என்றும், இறுதிப் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பெண் என்றும், அந்த யுத்தத்தின் சாட்சியாளர் என்றும் வெவ்வேறு விதமான அறிமுகம் மக்கள் மத்தியில் செய்யப்பட்டது.

இதன்படி வடக்கு மாகாண முதலமைச்சராகத் தெரிவான விக்னேஸ்வனுக்கு அடுத்த படியாக 87, 212 வாக்குகளை அனந்தி பெற்றிருந்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த கால கட்டத்தில் ஐ.நா. சென்று இறுதி யுத்தத்தின் போது நடைபெற்றது இனப்படுகொலை என வெளிப்படையாக பதிவிட்டிருந்தார்.

இவரின் செயற்பாடுகளை அடுத்து தமிழரசுக் கட்சிக்கும் இவருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனால் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சராக்கப்பட்ட இவர் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டார் எனக் குற்றம்சாட்டப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவுறும் நிலையில் அடுத்த தேர்தலில் எந்தக் கட்சி ஊடாகப் போட்டியிடுவது என்ற இக்கட்டான நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கினார். இதனடிப்படையில் ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற பெயர் கொண்ட புதிய கட்சியை அவர் நேற்று ஆரம்பித்தார். (ஐ-07)

# பிரிட்டிஷ் எம்.பிக்களுடன் தொடர் சந்திப்புகளில் நாடு கடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகள் தீவிரம்

லண்டன், ஒக்.22

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர் சந்திப்புகளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடக்கவிருக்கின்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிகள் கூட்டத்தொடரில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்யக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது.



அந்த வகையில் ஒக்டோபர் 19ஆம் திகதி Oxford தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Anneliese Dodds அவர்களுடன் ஓக்ஸ்போர்ட்டில் உள்ள அவரது காரியாலயத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. காலை 10.30 அளவில் ஆரம்பமாகிய இச்சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் வரை நடைபெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமுக நலன் பேணும் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கத்தினுடைய நெறிப்படுத்தலில் செயற்பாட்டாளர்களான நுஜிதன் இராசேந்திரம், பொன்ராசா புவலோஜன், டக்ளஸ் மென்டிஸன் அற்புதம், குஜிந்தன் சிவபாலன்,சந்திர குமார் பிரேமகுமார், ஆகியோர் கலந்து கொண்ட குறித்த சந்திப்புக்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்ட 30/1 ,34/1 இலக்கத் தீர்மானங்களை எந்தளவிற்கு இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராயப்பட்டு அது தொடர்பான இலங்கையின் நீதிப்பொறியமைவுகளை கண்காணிக்கும் பொறுப்புடமைக்கான சர்வதேச நிபுணர் குழுவின் (Sri Lanka Monitoring and Accountability Panel) அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றுக்கு (International Criminal Court) எதற்காக பரிந்துரைக்க வேண்டும் என்பது பற்றிய மனுவும் கையளிக்கப்பட்டது. குறிப்பிட்ட மனுவில் நடாளுமன்ற உறுப்பினர் கையொப்பமிட்டு தமரு ஆதரவைத் தெரிவித்தமையுடன் தொடர்ந்து இது தொடர்பாக நாடாளுமன்ற விவாதம் வரும் பட்சத்தில் கேள்விகளை முன்வைப்பதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழர் தாயக பகுதிகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் , நீண்ட நாள்களாக எந்தவித விசாரணையும் இன்றி சிறைகளில் வதைபட்டுக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை , காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அண்மையில் பிரித்தானியாவில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர் சொக்கலிங்கம் யோகலிங்கம் மற்றும் மூன்று செயற்பாட்டாளர்கள் தொடர்பாகவும் ஒக்ஸ்போட் காவல்துறையின் செயற்பாடுகள் மற்றும் பிரித்தானியாவில் தமிழீழ தேசிய கொடிக்குள்ள தடை தொடர்பான தெளிவற்ற தன்மை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இது தொடர்பாக ஒக்ஸ்போட் பகுதி பொலிஸாருடன் வருகின்ற சந்திப்பில் தாம் கலந்துரையாடி இதற்குரிய தீர்வொன்றினை எட்டுவதற்கு முயற்சிப்பார் எனவும் ாவர் உறுத்தியளித்தமையோடு வருகின்ற நாடாளுமன்ற அமர்வில் இது தொடர்பாகக் கேள்விகளை எழுப்புவார் எனவும் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# சூழல் பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு பச்சை யுத்தத்தை ஆரம்பித்துள்ளது!

## தடுக்கத் தவறின் செவ்விந்தியர்களின் கதியே எமக்கும் என ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.22

கொடூரமான முறையில் ஆயுத ரீதியாக முன்னெடுத்த யுத்தத்தை நிறுத்திக்கொண்ட அரசு இப்போது யுத்தத்தை வேறு வடிவங்களில் முன்னெடுக்க ஆரம்பித்திருக்கிறது. சூழல் பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு சத்தம் இல்லாத யுத்தம் ஒன்றை எம்மீது தொடுத்திருக்கிறது. வனங்களைப் பாதுகாத்தல், வன ஜீவராசிகளைப் பாதுகாத்தல் என்று சொல்லி ஏராளமாக எமது நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இந்த நிலஅபகரிப்பைத் தடுக்கத்தவறினால் அமெரிக்காவில் அதன் பூர்வகுடிகளான செவ்விந்தியர்களுக்கு ஏற்பட்ட கதியே விரைவில் எமக்கும் ஏற்படும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.




தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை 'சூழல் அரசியலும் நில அபகரிப்பும்' என்ற கருப்பொருளில் உரையரங்கு ஒன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு அரசு, வனவளத் திணைக்களத்தின் மூலமும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் மூலமும் புதிது புதிதாக எமது பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. வனவளத் திணைக்களம் 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஹெக்ரெயர் நிலப்பரப்பை இதுவரையில் அபகரித்து வைத்திருக்கிறது. இதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களம் 2016ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் இயற்கை ஒதுக்கிடம் என்று 7882 ஹெக்ரெயர் நிலத்தையும், மன்னார் மாவட்டத்தில் விடத்தில் தீவு இயற்கை ஒதுக்கிடம் என்று 29,180 ஹெக்ரெயர் நிலத்தையும், பறித்துவைத்திருக்கிறது. கடந்த 2017ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் இயற்கை ஒதுக்கிடமாக 4141 ஹெக்ரெயர் நிலப்பரப்பும், நாயாறு இயற்கை ஒதுக்கிடமாக 4464 ஹெக்ரெயர் நிலப்பரப்பும் சுவீகரிக்கப்பட்டுள்ளன.





அரசின் இந்த நிலக்கையகப்படுத்தல்கள் எல்லாம் சுற்றுச்சூழலைக் காப்பாற்றுகின்ற பசுமை நடவடிக்கைகளாகவே உலகத்தின் கண்களுக்குத் தெரியும். ஆனால், இவை பச்சை முகமூடி அணிந்துகொண்டு அரசு தந்திரமாக எம் மீது தொடுத்திருக்கின்ற ஒரு பச்சை யுத்தம். இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள எமது நிலங்களை விடுவிக்கக்கோரி நாங்கள் நடாத்துகின்ற போராட்டங்களின் நியாயத்தை உலகம் ஏற்றுக்கொள்ளும். உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக இந்த நிலங்களை அரசாங்கம் விடுவிக்கவும் நேரும். இதனால்தான் எவரும் ஆட்சேபிக்காத இயற்கைப் பாதுகாப்பு என்ற போர்வையில் இப்படி ஒரு நிலஆக்கிரமிப்பை அரசு மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

வன வளத் திணைக்களமும் வன ஜீவராசிகள் திணைக்களமும் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்கள். காலம் காலமாக இவர்கள் பயிர் செய்துவந்த நிலங்கள். இவர்கள் படித்த பாடசாலைகள் உள்ள இடங்கள். ஆனால், இனிமேல் இவர்கள் இங்கு இவை எவற்றையும் செய்ய முடியாது. செவ்விந்தியர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்களை அங்கு குடியேறிய ஐரோப்பியர்கள் தேசியப் பூங்காங்களாகப் பிரகடனப்படுத்தியே அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அவர்களின் நிலங்களைப் பிடுங்கினார்கள். இன்று அமெரிக்கா செவ்விந்தியர்களின் நாடு அல்ல. வந்தேறு குடிகளின் நாடு. இதே உத்தியைத்தான் இலங்கை அரசாங்கமும் கையில் எடுத்திருக்கிறது. – என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டிருந்தார். அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தொடக்க உரையாற்ற, து.ஜெயராஜ், திரு.க.குருநாதன், ஜே.பி.ஏ.ரஞ்சித்குமார் ஆகியோர் கருப்பொருள் உரைகளை நிகழ்த்தியிருந்தார்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.